
இரத்த வெறியர்கள்!
RE
லயன்
காமிக்ஸ்
ரூ. 6/-


அடுத்த வெளியீடு!
காரிகன் தோன்றும்
ஏரியில் ஒரு எரிமலை!
லயன் காமிக்ஸ்

# டெக்ஸ் வில்லர் தோன்றும்

# இரத்த வெறியர்கள்




பிரகாஷ் பப்ளிஷர்ஸ் சார்பாக லயன் காமிக்ஸ் மாத இதழை அச்சிடுபவரும் வெளியிடுபவரும், ஆசிரியரும் - S. விஜயன். முகவரி : பிரகாஷ் பப்ளிஷர்ஸ், தபால் பெட்டி எண் : 374, சிவகாசி - 626 123. போன் : 20649.
அச்சிட்டோர் : தி விஜய் புக்ஸ், சிவகாசி - 626 123.
வெளியீடு எண் : 8௦



இரத்த வெறியர்களின் எண்ணிக்கை அவ்வப்போது, மேற்கொண்டுள்ள சதித்திட்டத்தின் தன்மைக்கு ஏற்ப கூடும்.. குறையும் - சாதாரண வழிப்பறி என்றால் ஆறு அல்லது ஏழு பேர். பெரிய அளவிலான கொள்ளை என்றால் ஐம்பது பேர் - இப்படியாக!
அந்தக் கும்பல் வில்காக்ஸ் ஜங்ஷனில் யூனியன் பஸிபிக் எக்ஸ்பிரஸை பட்டப் பகலில் தாக்கி கொள்ளையடித்து பரபரப்பை ஏற்படுத்தியது. இந்தக் கும்பலை ஜனங்கள் மத்தியில் பிரபலமடையச் செய்தது, நெஞ்சை நடுங்கச் செய்த இந்த அதிரடி சம்பவம்தான்.
அந்த ரயில் கொள்ளையில் அவர்களுக்கு கிடைத்த லாபம் அறுபதாயிரம் டாலர்கள். அதே சமயம், இரயில் பாதையை பாதுகாக்கும் பொறுப்பிலிருந்த பிங்கர்டன் துப்பறியும் நிறுவனம் சுறுசுறுப்படைந்தது. எனவே- ஜூலையில் ஒருநாள் அவர்களுடைய டென்வர் அலுவலகத்தில்...
மிஸ்டர் வில்லர் வந்திருக்கிறார்!
சந்தோஷம்! உள்ளே வரச் சொல்!
ஸ்டீவன்ஸன்.. சௌக்கியமா?
டெக்ஸ்..! வா.. வா..!
இவ்வளவு சீக்கிரம் வந்து சேருவாய் என்று நான் எதிர் பார்க்கவேயில்லை.
காஸல் ராக்கில் இருந்தேன் நான் - உன் தந்தி வந்தபோது! முதல் இரயிலை பிடித்து நேரே வந்துவிட்டேன்.
உன்னை நான் எதற்காக வரவழைத் திருக்கிறேன் என்று..
..யூகிப்பதில் கொஞ்சம் கூட சிரமம் இருக்க வில்லை


காஸிடி கும்பல் நடத்திய இரயில் கொள்ளை தானே?
ஆமாம்.. அறுபதினாயிரம் டாலர்கள்!
அந்தக் கும்பலை பிடித்துக் கொடுப்பவர்களுக்கு ஐயாயிரம் டாலர்கள் வெகுமதி வழங்குவதாக யூனியன் பஸிபிக் அறிவிப்பு வெளியிட்டிருப்பதாக கேள்விப்பட்டேன்..
அது நிஜம்தான்!
உனக்கு அதில் ஆர்வம்தானே டெக்ஸ்?
வெகுமதியிலா?
பணம் என்றைக்குமே என்னை கவர்ந்து இழுத்ததில்லை என்று உனக்குத் தெரியுமே
தெரியும்.. அதனால்தான் உன்னை எப்படி இந்த விவகாரத்தினுள் இழுப்பது என்று -
நீ அலட்டிக் கொள்ளத் தேவையில்லை ஸ்டீவன்ஸன்.
நீ என்னை அழைத்திராவிட்டாலும், நான் அந்த போக்கிரி ராஸ்கல் காஸிடியையும், அவனுடைய அடிவருடிகளையும் தேடிக் கொண்டு கிளம்பியிருப்பேன். என்ன காரணம் என்று உனக்கு கேட்கத் தோன்றுகிறதல்லவா?
அந்தக் கும்பலில் ஒருவனான கிட் கர்ரி என்னும் கயவன் காஸில் ராக்கின் ஷெரீப் ஹஸேனை படுகொலை செய்து விட்டான். ஹஸேன் என் நெடுநாளைய நண்பர்.. பழி தீர்க்காதவரை என் மனம் அமைதி பெறாது!
ஓ.. அப்படியா..!
காஸிடியோடு இந்த கிட் கர்ரி தவிர வேறு யாரெல்லாம் இருக்கிறார்கள்?


..ம்ம்.. லான்னி லோகன், டாம் ஓ டே, பாப் லீ, ஸ்லிம் ஈஸ்ட் வுட்...
அத்தனையும் ஈனப்பிறவிகள்!
பட்டியல் இத்தோடு முடிந்துவிட வில்லை.. ப்ரவுன் ஹோலில் சுமார் இரு நூறு போக்கிரிகள் பதுங்கிக் கிடக்கிறார்களாம் - காஸிடியோடு இணைந்து கொள்ள!
உண்மை சற்று மிகைப்படுத்தப் பட்டிருக்கிறது என்று நான் நினைக்கிறேன்!
இருக்கலாம்... டெக்ஸ்! ஆனால் இப்படியொரு அடாவடி கும்பல் இதுவரை உருப்பெற்றதேயில்லை என்பது உண்மைதானே?
வாஸ்தவம் தான்!
உன்னிடம் விடை பெற்றுக் கிளம்பும் நான் அந்த நாசகார கும்பலை வேரறுக் காமல் ஓயமாட்டேன் ஸ்டீவன்ஸன்.
அது சுலபமான காரியமில்லை.. டெக்ஸ்!
நாடு முழுக்க பரவிக் கிடக்கிறார்கள் அந்தக் கும்பலின் ஒற்றர்கள்.. அவர்களை அழிக்க நீ கிளம்பியிருக்கும் செய்தி உடனடியாக அவர்களை எட்டுவது நிச்சயம்.
நான் அதை அறிவேன்!
நான் தனியாக செல்லப் போவதில்லை.. என் நண்பர்கள் என்னோடு இருப்பார்கள். ஆபத்தான சூழலில் எப்போதும் விழிப்போடிருக்க பயிற்சி உண்டு எங்களுக்கு!
நல்லது!


அந்த கும்பலின் சமீபத்திய நடவடிக்கைகள் பற்றி நான் அறிந்தவற்றை உனக்கு தெரிவிப்பதோடு ஹோல் இன் திவால் பிராந்தியத்தில் உள்ள என் ஏஜென்டுகளின் பட்டியலையும் தருகிறேன்!
இப்போது அங்கேதான் இருக்கிறதா அந்தக் கும்பல்?
வெளியே பாதகமான சூழல் உருவானால் அவர்கள் ஓடிப் பதுங்கும் இடம் அதுதான். காஸிடியை நிச்சயமாக அங்கே நீ சந்திக்க முடியும்!
இந்தா.. டெக்ஸ்! உனக்கு தேவையான விபரங்கள் அனைத்தும் இதில் உள்ளது. உனக்கு ஒத்தாசை தேவைப் பட்டால் எந்த தருணத்திலும் ஓடோடி வர இந்த பிங்கர்டன் ஏஜென்ஸி தயாராக இருக்கிறது என்பதை மட்டும் ஞாபகத்தில் வைத்துக் கொள்..
நன்றி!
ம்ம்... யூனியன் பஸிபிக் பகுதியில் உள்ள உன் ஏஜென்டுகளுக்கு என்ன நோக்கத்தோடு நான் அங்கே வருகிறேன் என்று நீ தகவல் கொடு.. அவசியப்பட்டால் அவர்களுடைய உதவியை நான் கோரிப் பெற ஏதுவாக இருக்கும்.
நிச்சயமாக செய்கிறேன்... வில்லர்!
கொலை வெறி கொண்ட அந்த திருட்டுக் கும்பலை அடியோடு களைந்தால்தான் மக்கள் நிம்மதியாக வாழ முடியும். அதற்கு நம் போன்றவர்கள் தோளோடு தோள் நின்று போராட வேண்டியது அவசியம்..
இறுதியில் நியாயம்தான் வெல்லும்- சந்தேகம் வேண்டாம்.
மறுநாள், டென்வரிலிருந்து இரண்டு மைல் தொலைவில்
பிரச்னை ஏதுமில்லையே?
இல்லை..! பிங்கர்டன் ஏஜென்ஸியை விட்டு நீ கிளம்பியதிலிருந்து போதுமான இடைவெளிவிட்டு நான் பின் தொடர்ந்து வந்தேன்..


..சந்தேகப்படும்படியாக எதுவும் கண்ணில்படவில்லை என்பதோடு யாரும் என்னை பின் தொடரவில்லை- அப்படித்தானே!
ஆமாம்...!
நல்லது..! இப்போதைக்கு நமக்கு ஆபத்து வராது. ஆனால் நான் அவர்களைத் தேடி வந்து கொண்டிருக்கிறேன் என்ற செய்தி வெகு சீக்கிரத்திலேயே அவர்களை போய் எட்டுவது நிச்சயம்!
சரி.. நீ கேள்விப் பட்டதை விபரமாகச் சொல்!
விஷயம் முழுவதையும் கார்ஸனுக்கு விளக் கினார் டெக்ஸ். பின்னர் ஸ்டீவன்ஸன் தந்த 'இரத்த வெறியர்க ளின்' பெயர் பட்டியலை நீட்டினார் அதைப் படித் துப் பார்த்த கார்ஸன் திகைத்துப் போனார்!
சரியான வெறியர் கும்பலாக இருக்கிறதே.. ஒவ்வொருத்தனும் துப்பாக்கியை கையாளுவதில் சமர்த்தன்..
மிரட்சியாக இருக்கிறதா.. கார்ஸன்?
இல்லை! ஆனால் இது நம் சக்திக்கு சற்று மிஞ்சிய விவகாரமோ என்று தோன்றுகிறது.
கடினமான முயற்சிதான் என்று எனக்குத் தெரியாமலில்லை. ஆனால் அவர்களை பூண்டோடு அழிக்க நம்மால் முடியும் கார்ஸன்.. நிச்சயமாக முடியும்!
எனக்கும் அந்த நம்பிக்கை இருக்கிறது டெக்ஸ்.
இரத்த வெறியர்களின் தடத்தில் டெக்ஸும், கார்ஸனும் தீவிர மாய் புறப்பட்டனர். அவர்களது வேட்டையின் முதல் குறி- இரத்த வெறியர்களின் முக்கிய ரௌடியான ஸாம் கெட்ஸம்!
கமான்..! நேரத்தை வீணடிக் காதே..!
அவனை நீ எங்கே பார்த்தாய்.. சொல்!
ஓல்டு குரோ மதுபானக் கடையில்!- நேற்றிரவு வந் திருக்கிறான்.



அவன்தான் என்பதில் எனக்கு சந்தேகமே கிடையாது. அதே இடத்தில் சென்ற வருடம் ஹெலன் டைக்கோடு இவனை பார்த்திருக்கிறேன்.
நல்லது!
இந்தாபிடி - நூறு டாலர்கள்! ஸாம் கெட்ஸம் எங்களிடம் அகப்பட்டதும் மிச்சத் தொகை உனக்கு கிடைக்கும்..! போ- எங்கேயாவது தலைமறைவாக போய்விடு!.. புரிந்ததா?
புரிந்து கொண்டேன்.. ஷெரீப்!
அவன் வெளியேறி மறைந்த பின் டெக்ஸ் வெறுப்போடு ஷெரீப்பின் பக்கம் திரும்பினார்.
இந்த குள்ளநரிப் பயலை நம்பு கிறீர்களா?
ஏன் கூடாது? நரிகளாலும் நமக்கு உப யோகம் இல்லாம லில்லை!
மூன்று தினங்களுக்கு முன் வீசிய சூறைக்காற்று காரண மாக கெட்ஸமின் வழித்தடத்தை பின் தொடர முடியாமல் இங்கே ட்ரினிடாட்டில் நீயும், கார்ஸனும் தடைப்பட்டு நின்றது தற்செயலானது.அந்தக் கிழவனுக்கு கெட்ஸமைப் பற்றிய அடையாளம் தெரிந்திருந்தது நீ செய்த அதிர்ஷ்டம் என்று வைத்துக் கொள்!
..இல்லையேல், அவனுடைய இருப்பிடத்தை நீ தெரிந்து கொண்டிருக்க முடியாது போயிருக்கும். உனக்கு உதவவே இக்காரியத்தை செய்தேன். ஆகவே, இப்படி ஒரு வெறுப்பு உமிழும் பார்வை அவசியமில்லை.. டெக்ஸ்!
சரி.. கிளம்பு- போவோம்!
அவனை உயிரோடு பிடிக்க உத்தேசமா?
அவனை பிடிக்க வேண்டும்- உயிருடனோ.. பிணமாகவோ!


அதே சமயம் ஓல்டு குரோ மதுபானக் கடையின் முதல் மாடியில்...
நான் சொன்னது புரிந்ததா?
ம்ம்..! அதாவது அவர்களை நான் பால்ஸமில் சந்திக்க வேண்டும்!
ஒருவேளை ராபினும், மில்டனும் கேபினில் இல்லை என்றால் உடனே நான் கிட் கார்ரியை எச்சரிக்க வேண்டும்.
விவகாரத்தை கொஞ்ச நாட் களுக்கு ஒத்திப் போட்டிருப் பதாக சொல்.. அவனிடம்!
சொல்கிறேன்..! இடையில் அவன் செய்ய வேண்டியது எதுவுமில்லை என்றும் தெரிவிக்கிறேன்.
?
ஸாம்..! ஷெரீப் இங்கே வருகிறார் - வேறு இரு நபர்களோடு! அவர்கள் நடந்து வரும் தோரணையே சரியில்லை. ஏதோ விபரீதம் முளை விடுகிறது என்று தோன்றுகிறது.
!
ரேஞ்சர்கள்..! கடந்த இரண்டு வாரங்களாக என்னை விடாமல் துரத்தி வரும் எமன்கள்..!
துப்பறி வாளர்களா?
சண்டாளப் பயல் டெக்ஸ் வில்லரும்.. அவனுடைய சகா கிட் கார்ஸனும்!
வேண்டாம் ஸாம்.. இங்கே வேண்டாம்!


விலகிப் போடி.. அப்பால்!
ஆவ்..!
டீஷ்!
ஜாக்கிரதை!
ஆஆஆ..
க்ராக்!
தோட்டா மழை!
ஜிம் நீ புறப்படு- சுட்டுக் கொண்டே!
டுமீல்
டுமீல்



ஹே.. இது -
டுமீல் டுமீல்
டுமீல்!
டுமீல்!
டுமீல்
டுமீல்
க்ராஷ்
ஓடிப் போய்விடு ஸாம்! அவர்களிடம் அகப்பட்டுக் கொண்டாயோ., தொலைந்தாய்!
ஓடி ஒளியும் கோழையல்ல இந்த ஸாம்..! எவனும் என்னை தொட முடியாது!
டுமீல்!
டுமீல்!
க்ராஷ்
ஸாம்!
ஓ..! ஒன்று மில்லை... லேசான சிறாய்ப்புத் தான்!


குறி வைப்பதில் அவனுக்கிருந்த திறமை கொஞ்சம் கூட குறையவில்லை... ஹூம்.. அவன் மட்டும் சட்டத்தின் பக்கம் இல்லாமல் எங்கள் கூட்டாளியாக இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்.
ஸாம்.. சொன்னால் கேள்!
பின்புறமாக வெளியேறி ஓடிப் போய்விடு... ஹாங்க் வாயை திறக்க மாட்டான் - அவனை நீ நம்பலாம்! இந்த வாய்ப்பை நீ நழுவ விட்டால் பின்னால் ஆயுளுக்கும் வருத்தப்படுவாய்!
நீ சொல்வதும் சரிதான்!
ஸாம் கெட்ஸம்! துப்பாக்கியை தூர எறிந்து விட்டு வெளியேறி வந்து . சரணடை!
நடக்காது.. வில்லர்! என் துப்பாக்கி வேண்டுமானால் திறந்த வெளிக்கு வா.. - தருகிறேன்! அதற்கு துணிவு இருக்கிறதா உன்னிடம்?
சரி.. உன் இஷ்டப்படியே நடக்கட்டும்!
டுமீல்
டுமீல்
டுமீல்
டுமீல்
அம்மாடி யோவ்..!


துப்பாக்கிகளால் சரமாரியாக சுட்டுக் கொண்டே மதுபானக் கடையை நோக்கி தெருவின் குறுக்கே ஓடினார் டெக்ஸ்.
டுமீல் டுமீல்
ஆட்டம் சூடு பிடித்து விட்டது!
ஓடி வா... கார்ஸன்!
போ.. ஸாம்! சொன்னால் கேள்!
சரி..! பிறகு சந்திப்போம்!
ஜிம் இங்கே வா..! ஸாம் குதிரை மீது ஏறும் வரை நாம் பாதுகாப்பு கொடுப்போம்!
டுமீல் டுமீல்
டுமீல் டுமீல்
ஆஆஆ...
ஓடி விடு ஜிம்..! வெளியேற பிறகு வாய்ப்பு கிடைக்காது போலிருக்கிறது.. ம்ம்.. சீக்கிரம்!


ஓடி வா கார்ஸன்..! கதவருகே நின்று எனக்கு பாதுகாப்பு கொடு -
ஹாங்க்... உன் உதவி தேவை! ரேஞ்சர்கள் என்னை துரத்திக் கொண்டு வருகிறார்கள்... ஏதாவது செய்து என்னை காப்பாற்று.
ஸாரி.. ஸாம்! நான் செய்யக்கூடியது எதுவுமே இல்லை..! ஆனால் ஒரு சிறு யோசனை..
ஜாக்கிரதை..!
கதவை திறந்து வை..
டுமீல்
டுமீல்
என்னமாய் பாய்ந்து பதுங்குகிறான்.: ஆனாலும் அவனை நான் வீழ்த்தாமல் விடமாட்டேன்.
ஏய்.. என்ன இது -
பதுங்கு...!
என்னை நீ தொட முடியாது.. வில்லர்!
டுமீல்
டுமீல்



டுமீல்
டுமீல்
தோட்டாக் களை நீ வீணடிக் கிறாய்.. ஸாம்!
டுமீல்
டுமீல்
படுபாவி!
தன் தோழனின் குறுக்கீட்டினால் கிடைத்த துளி அவகாசத்தை பயன்படுத்திக் கொண்டு, சமையல்கட்டை நோக்கிப் பாய்ந்தோடினான் ஸாம்..
அரிய வாய்ப்பு - நழுவ விடக் கூடாது!
டுமீல்
..கொல்லைப்புற வாசல் வழியாக வெளியேறி தப்பியோடினான் ஸாம்.
?!
படிக்கட்டின் உச்சியிலிருந்த ஜிம்மை எதிர்த்து போராடிக் கொண்டிருந்தார் டெக்ஸ்.
டுமீல்
டுமீல்



ஆ...!
டுட்!
துப்பாக்கியை கீழே போடு- இல்லையேல்...
அந்த எச்சரிக்கையை அலட்சியம் செய்துவிட்டு இடக்கை யினால் துப்பாக்கியை ஏந்தி சுட ஆரம்பித்தான் ஜிம்..
ஜிம் யாரென்று புரிய வைக் கிறேன்.
ஆனால், கார்ஸனின் தோட்டா அவனுடைய இடக்கையை பதம் பார்த்தது.
டுமீல்
உங்களில் எவரும் ஹீரோத்தனமாக எதையும் செய்யத் துணிய மாட்டீர்கள் என்று நம்புகிறேன்!
இதற்கிடையே, ஸாமை பின் தொடரும் எண்ணத்தோடு பாய்ந்தோடினார் டெக்ஸ்.
ஆ..வ்வ்!
சரக்!



இதை இங்கே கொட்டி வைத்தது நீதானா..? உன்னை -
நானில்லை.. ஸார்! என்னை நம்புங்கள்!
எனக்கு முன் இங்கே ஓடி வந்தவனின் விஷமத்தனமா இது?
ஆமாம்.. ஸார்!
அதே வேளையில் புயலென நகரைவிட்டு வெளியேறிச் சென்று கொண்டிருந்தான் ஸாம்.
அந்தக் குளம்பொலியை கேட்ட டெக்ஸ் நிலைமையை யூகித்தவாறாக பெருமூச்சுவிட்டார்..
மறுபடியும் அந்த நச்சுப் பாம்பு என்னிட மிருந்து தப்பி விட்டதே!
அதையடுத்து -
செத்து விட்டானா?
இல்லை.. வெறும் மயக்கம்தான்!
..வசமிழந்து ஏதேதோ பிதற்று கிறான்..
உஷ்..! கவனமாக கேள்!
பால்ஸம்.. அங்கே போய் நான்..


..நான் போய்.. கிட் கார்ரியை.. எச்சரிக் -
ஹீம்! செத்து விட்டான்!
பரிதாபம்! தகாத சேர்க்கையினால் உயிரை விட்ட வகையில் இவன் பாவம் என்றால், செய்தியை முழுக்க தெரிந்து கொள்ள முடியாமல் போன வகையில் நாம் துரதிர்ஷ்டசாலிகளாகிவிட்டோம்!
அவன் யார்?
தெரியவில்லை..! இதற்கு முன் அவன் இங்கே வந்தது கிடையாது!
அதாவது ஸாம் கெட்ஸமை இதற்கு முன் நீ பார்த்ததில்லை - கேள்விப்பட்ட தில்லை என்கிறாய்.. அப்படித்தானே? யாரிடம் கதை விடுகிறாய்?
சத்தியமாக சொல்கிறேன். அவனை எனக்குத் தெரியாது!
உனக்கு இன்னொரு வாய்ப்பு கொடுக்கிறேன்!
உண்மையை சொல்.. இல்லையேல், பல்லைத் தட்டி கையில் கொடுத்து விடுவேன்!
ஓ.கே..! ஸாம் கெட்ஸமை எனக்குத் தெரியும்!


இப்போதுதான் நீ சமர்த்து..! கிழ வயதில் தான் உனக்கு மரணம் வரும்! சரி.. மேலே சொல்!
எ..எ..னக்கு அவனைத் தெரியும்.. அவ்வளவு தான்!
ஹாங்க்... மேலே எதுவும் பேசாதே..! ஆமாம் - சொல்லிவிட்டேன்!
?
?
யாரடா.. நீ - குறுக்கே புகுந்து இடைஞ்சல் பண்ணுவது?
நானொரு சுதந்திர பிரஜை.. நான்..
கும்!
ஓ.கே... சுதந்திர பிரஜை.. - இனிய கனவுகள் கண்டு கொண்டிரு!
!
வா.. கார்ஸன் வெளியே செல்வோம் - இங்கே ஓரேயடியாக குமட்டுகிறது!
!
வெளியேறியதும்..
வா.. போய் ஷெரீப்புக்கு என்ன ஆயிற்று என்று பார்ப்போம்!



சாலையின் மத்தியில் ஜனங்கள் கும்பலாக நின்றிருந்த இடத்தை நோக்கி இருவரும் விரைந்தார்கள். ஷெரீப்பை நாலைந்து பேர் பக்குவமாக தூக்கிச் செல்வதை மௌன மாக கவனித்துக் கொண்டிருந்துவிட்டு, அங்கே கறுப்பு உடையணிந்து நின்ற மனிதரை நோக்கித் திரும்பினார் டெக்ஸ்..
நீங்கள்.. டாக்டரா?
ஆமாம் - டாக்டர் ரூபர்ட்ஸ்!
அங்கே மதுபானக் கடையிலிருந்து துப்பாக்கி முழக்கம் வரக்கேட்டேன்... அங்கே யாருக்கேனும் என் உதவி தேவைப்படுகிறதா!
இல்லை... டாக்டர்!
காயம் பட்டவன் செத்துவிட்டான்..! ஷெரீப்பை பற்றி விசாரிக்கவே உங்களை நிறுத்தினேன். தூக்கிக் கொண்டு போனார்களே.. படுமோசமாக காயமடைந்திருக்கிறாரோ?
உயிருக்கு ஆபத்து இல்லை!
அதிர்ஷ்டக்காரர்! சதையில் மட்டுமே சேதம் ஏற்பட்டிருக்கிறது. நாலைந்து தினங்களில் பூரண குணமடைந்து விடுவார்.
நன்றி.. டாக்டர்! இன்றைக்கு நானும் கார்ஸனும் கேள்விப்படும் முதல் நல்ல சேதி இதுதான்!
அதேசமயம்- ஊருக்கு வெளியே..
டுமீல்! டுமீல்!
சுற்று வட்டாரத்தில் உள்ள மார்ஷல்கள், ஷெரீப்புகளுக்கு தந்தி மூலம் செய்தியனுப்ப டெக்ஸ் முயற்சிப்பானே யானால் அப்போது புரியும் அவனுக்கு - இந்த ஸாம் கெட்ஸம் எப்படிப்பட்ட ஆசாமி என்று!


ஏற்கனவே போலீஸ் தொல்லை தாங்கவில்லை.. இப்போது இந்த டெக்ஸ், கார்ஸன் என்று இரு சைத்தான்கள் வேறு. ஆண்டவன்தான் என்னைக் காப்பாற்ற வேண்டும்!
இருளில் ஒரு இடி
மகா பொல்லாத ஜோடி! இப்பகுதியில் உள்ள அத்தனை ஷெரீப்புகளையும் ஒன்று சேர்த்தால் கூட இவர்கள் இருவருக்கும் இணையாக மாட்டார்கள். வில்லர் இப்போது நகரில் இருப்பதால், இரயில் கொள்ளையை திட்டமிட்டபடி அல்லாமல் சற்று சீக்கிரமாகவே நடத்திவிடுவதுதான் விவேகம் என்று தோன்றுகிறது!
...உடனடியாக நான் என் தடத்தை மறைக்க ஏதாவது செய்தாக வேண்டும்... இல்லையேல், எந்த வினாடியிலும் டெக்ஸ் பின் தொடர்ந்து வந்து என் மென்னியை பிடித்துவிடக் கூடும்.
..சே! இப்படியாகிவிட்டதே என் நிலைமை!


சில நிமிடங்களுக்குப் பின் -
ஹைய்யா..! அதிர்ஷ்டம் என்னை கைவிட்டு விடவில்லை..! எனக்குத் தேவையானது - அதோ!
அந்த கிழவனை சரிக்கட்டி படகில் ஏறி ஆற்றின் போக்கில் போய்விட்டால் என் தடம் இங்கே துண்டிக்கப்பட்டுவிடும்... ரேஞ்சர் என்னை பின் தொடர்ந்து வர இயலாது!
தாத்தா.. நானும் உங்களோடு படகில் வரலாமா?
உனக்கென்ன பைத்தியமா?
இந்த சின்னப் படகில் உன் குதிரை ஒரு காலை வைத்தாலே இது தலை குப்புற கவிழ்ந்து விடும் என்று தெரியாதா உனக்கு?
அடேய்.. முட்டாள் கிழவா...
என் குதிரையையும் படகில் ஏற்றிக் கொண்டு போகச் சொன்னேனா உன்னை? இது தன் போக்கில் போய் விடும்.. நான் மட்டும்தான் உன்னோடு வரப்போகிறேன்.
ம்ம்.. வந்து தொலை!
சரி.. படகை செலுத்து! நானும் உன்னோடு வருவதை சீக்கிரமே நீ ரசிக்கக்கூடும்!
தலை.. எழுத்து!


இந்த மாதிரி பேச்செல்லாம் என்கிட்டே வேண்டாம்.. ஜாக்கிரதை!
நா..நான் - ஹே..
சரி..! நான் இனி வாயை திறக்கவே மாட்டேன்.. அந்த துப்பாக்கியை கொஞ்சம் கண் மறைவாக வை!
நியாயமான கோரிக்கை! ஆனால் மறுபடியும் ஏதாவது உளறினாயோ.. குடலை எடுத்துவிடுவேன் - ஜாக்கிரதை!
குதிரையின் சேணத்தை கழற்றி எடுத்துக் கொண்டு அதன் பிட்டத்தில் ஓங்கி ஒரு அடி வைத்து, மறுகரை நோக்கி செல்லுமாறு தள்ளிவிட்டான் ஸாம்.
போடா... பையா.. போ..
போ.. யாஆஆ.. ஹாஆ.. ஆஹாஆ..
ஹூம்.. அட்டகாசமான குதிரை..! அதை இப்படி அநாதையாக்குவது... வெட்கக்கேடு!
விடு.. இந்தக் கழுதை போனால் வேறொன்று..! நல்ல குதிரைகளுக்கா நாட்டில் பஞ்சம்?
சரி.. முடிந்த வரை வேகமாக துடுப்பு போட்டு ஆற்றின் போக்கில் விடு.. படகை!
அப்படியானால் என் மீன்கள்?


இப்போது உனக்கு மீன் முக்கியமா? உன் மர மண்டை முக்கியமா?
உன்னை துரத்திக் கொண்டு வருவது யார்?
கேள்வி எதுவும் கேட்காதே என்னை! நீ ஏன் உனக்கு சம்பந்தம் இல்லாத விஷயங்களில் எல்லாம் மூக்கை நுழைக்கிறாய்?
சும்மா தெரிந்து கொள்ளலாமே என்றுதான் கேட்டேன்.
உன்னிடம் காணப்படும் பதற்றத்தை வைத்து கணித்தால் உன்னை..
மூடு வாயை..!
மேற்கொண்டு எதுவும் பேசினால் பிணமாகிப் போவாய்.. ஜாக்கிரதை!
உனக்கு ஏன் தான் இவ்வளவு கோபம் வரு கிறதோ?
இதற்கிடையே..
அதிர்ஷ்ட மில்லையோ..?
ஆமாம்..! ஆனால் கெட்ஸெம் அதிக தொலைவு போயிருக்க முடியாது!
விரட்டிப் போனால் இரண்டு மூன்று தினங்களில் பிடித்து விட முடியலாம்!


ஸாம் கெட்ஸமையும், கிட் கர்ரியையும் பொறியில் விழ வைக்க முக்கியமான தடயம் எங்களுக்கு கிடைத்திருக்கிறது. பால்ஸம் என்றொரு இடத்தை நீ கேள்விப்பட்டிருக்கிறாயா?
ஓ..!
இங்கிருந்து எண்பது மைல் தொலைவில் உள்ள ஒரு இரயில் நிலையம் அது..!
ஓகோ..! கெட்ஸமின் சகா சாகுமுன் இவ்விடத்தை குறிப்பிட்டான்.. அது ஒரு முக்கியமான தகவல் என்று கருதுகிறேன்!
அங்கே போகப் போகிறீர்களா என்ன?
உஷ்ஷ்.. பேசியது போதும் ஷெரீப்.. பூரண ஓய்வு தேவை - உங்களுக்கு!
ஓ.கே. டாக்டர்.. நாங்கள் இதோ கிளம்பி விட்டோம்!.. பின்னர் சந்திப்போம் ஷெரீப்!
அரை மணி நேரம் கழித்து-
அந்தப் பயல் கெட்ஸம் சரியான குள்ளநரி - நைஸாக நழுவிவிட்டானே!
அதிர்ஷ்டம் துணை புரிந்து விட்டது - அவ்வளவு தான்!
நீ மட்டும் சமையல் கட்டில் ஆப்பிள் கூடை மீது தடுக்கி விழாதிருந்தால்..
அவனுடைய திறமையை குறைவாக மதிப்பீடு செய்யாதே கார்ஸன்!


அவன் தப்பியதில் அதிர்ஷ்டத்தின் பங்கு சிறிதளவே. விஷப் பாம்பின் வேகத்தில் அவன் ஓட்டம் பிடிக்கிறான்
ஸாமோடு நின்று விடுவதில்லை நம் பிரச்னை. அவன் கிட்கார்ரியை சந்திக்கத்தான் போய்க் கொண்டிருக் கிறான் என்பது என் யூகம்.. கார்ரிதான் நமக்கு தீராத தலைவலி. கொலை செய்ய அஞ்சாத மாபாதகன்...
இப்படியொரு சூழ்நிலையில் டைகரும், உன் மகனும் நமக்கு பக்க பலமாக இருந்தால் நல்லதில்லையா?
அதைப்பற்றி சிந்திக்க வேண்டிய அளவுக்கு நெருக்கடி ஏற்பட வில்லை... இன்னமும்!
அந்த இரு கயவர்களோடு மோத நாம் இருவர் போதும். - சமபலம்!
சம பலமா?
காஸிடியை சுற்றிலும் நூற்றுக்கும் மேற்பட்ட கைக்கூலிகள் இருப்பதை மறந்துவிட்டுப் பேசுகிறாயா?
சும்மா அலட்டிக்காதே கார்ஸன்!
அவனை சுற்றிலும் மந்தை போல் ஆட்கள் இருப்பது என்னவோ உண்மைதான்... ஆனால் அத்தனையும் சோற்றுப் பட்டாளம்.. தோட்டா முழக்கத்தை கேட்ட மாத்திரத்தில் குதி பிடரியில் அடிக்க ஓடிப் போய்விடும் கோழைகள்..



கர்ரி, கெட்ஸம், ஸண்டன்ஸ் கிட், ட்ரேஸி, கில்பாட்ரிக், ராபின், மில்டன் . போன்றவர்களை மட்டும் நாம் கணக்கில் கொண்டால் போதுமானது..
நாம் திட்டமிட்டபடி, இவர்களை ஒருவர் பின் ஒருவராக நாம் எதிர்கொள்ளும் பட்சத்தில் டைகர் ஜாக், கிட் ஆகியோரின் உதவி நமக்கு அவசியப்படாது.. நாமே சமாளித்துவிட முடியும்.
ஒருவேளை, அவர்கள் ஒட்டு மொத்தமாக நின்று நம்மீது பாய்ந்தால் நம் கதி என்னவாகும் என்று நீ யோசித்தாயா?
அப்படியொரு அசம்பாவிதம் நிகழும் வாய்ப்பு ஒரு சதவீதம் தான்!
அந்த ஒரு சதவீதம் நிஜமாகி விட்டால்..?
புலம்பாதே.... ஏற்கனவே நாலு கழுதை வயசாயிருச்சி... இன்னும் நூறு வருஷம் உயிர்வாழ ஆசையா?
மூன்று மணி நேரம் கழித்து-
ஹலோ.. வாருங்கள்!
அப்படியே எழுந்து நில்..
குதிரை ஒன்றின் காலடி தடங்களை அங்கே கண்டோம்.. இத்திசையில் தொடர்ந்து அந்த குளம்படி தடம்..


..இங்கே நின்று விட்டது. எனவே, எங்களுக்கு நீ தெரிவிக்க வேண்டிய தெல்லாம் அந்தக் குதிரை மீது இங்கே வந்த நபர் யார் என்பது மட்டுமே!
ஸாரி நண்பர்களே..! இந்தக் குதிரை நான் கண்டபோது இதன் மீது எவரும் இருக்க வில்லை.
சேணம் கூட இருக்க வில்லை.. தன்னந்தனியாக வந்தது..
நன்றாக நனைந்து போய்.. ஏகமாக களைப்புற்ற நிலையில்!
யாரையாவது பின் தொடர்ந்து செல்லும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறீர்களோ? அதனால்தான் என் பதில் உங்களை வாயடைக்கச் செய்துவிட்டது என்று நினைக்கிறேன்.
கெட்டது போ..!
?
அந்த விஷப்பாம்பு மறுபடியும் நம்மை முட்டாளாக்கி விட்டான் போலிருக்கிறதே!
சரியான எத்தன்!
களைப்புற்றிருக்கிறீர்கள்..! இறங்கி வந்து சூடாக கொஞ்சம் காப்பி பருகிவிட்டுப் போகலாமே..!
எங்களுக்கு அது தேவைதான்..! நன்றி நண்பனே!
எப்படி மாயமாக மறைந் திருப்பான்?
தொலைகிறான் விடு.. கார்ஸன்! இந்நேரம் அவன் பல மைல் தொலைவு கடந்திருக்கக்கூடும்..



ஒரு மணி நேரம் கழித்து மீண்டும் பயணத்தை தொடர்ந்தார்கள்...
அடுத்து?
மீண்டும், தடம் நின்று விட்ட ஆற்றங்கரைக்கே செல்வோம்..
அங்கிருந்து எப்படி நழுவியிருப்பான் என்று யூகிக்க முயற்சிப்போம்!
வெட்டிவேலையோ என்று தோன்று கிறது டெக்ஸ்.. நம் முகத்தில் கரியை பூசிவிட்டான் என்பதை ஒத்துக் கொள்ளத்தான் வேண்டும்.
இரண்டு தினங்களுக்குப் பின் - ஜுலை 11 ந்தேதி... பால்ஸமுக்கு அருகாமையில் முன்னிரவு வேளையில் ட்ரினிடாட் நோக்கிச் சென்று கொண்டிருந்த எக்ஸ்பிரஸின் முதல் பெட்டியிலிருந்த இரு"பயணிகள்" பொறுமையிழந்து காத்துக் கொண்டிருந்தார்கள்.
தருணம் வந்து விட்டது கிட்.
சரி.. கிளம்பு!
அந்தப் பயணிகள்
ஸாம் கெட்ஸமும் கிட் கர்ரியும்.பெட்டியை விட்டு வெளி வந்து எஞ்சின் மீது ஏறினார்கள்..
எஞ்சினிலிருந்த டிரைவர்கள் இருவரும் அவர்களுடைய வரவை கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை.
??
வண்டியை நிறுத்துங்கள்! விஷமத் தனமாக எதையும் செய்ய நினைக்காதீர்கள்!
அவர்கள் சொல்கிறபடி செய்வோம்.. பில்!
ஆமாம்.. அதுதான் உங்களுக்கு நல்லது!


இரயில் சட்டென்று வேகமிழந்து பின்னர் நின்றது.. சரேலென வேறொரு பெட்டியிலிருந்து முகமூடி அணிந்த ஒரு மனிதன் இறங்கி ஓடி வந்தான்..
...இதுவரை மூன்று உபரி குதிரைகளோடு மறைவில் பதுங்கிக் கிடந்த நான்காவது நபர் இரயிலை நோக்கி விரைந்து வந்தான்.
இதோ வந்து விட்டேன்... தோழர்களே!
நெருங்கி வந்து இந்த இருவர் மீதும் ஒரு கண் வைத்திரு..
பிரச்னை ஏதும் இல்லையே?
இல்லை.. எல்லாமே திட்டமிட்டபடி நடக்கிறது!
மூன்று கயவர்கள் மெயில் வாகனை நோக்கி விரைந்தார்கள்..
கதவை திற.. இல்லையேல் வெடி வைத்து தகர்ப்போம்..
COMPANY
இதற்கெல்லாம் மிரளும் ஆள் நானில்லை.. கதவை திறக்க முடியாது!


முட்டாளே!
இனியும் தாமதிக்க முடியாது!
சண்டாளர்கள்!
டுமீல்!
அதே சமயம்..
அங்கே என்ன கலாட்டா..? துப்பாக்கி முழக்கம் கேட்கிறதே...
?
கிளம்பு.. கார்ஸன்! வா.. போய் என்னவென்று பார்ப்போம். நிச்சயம் கெட்ஸம் இதில் சம்பந்தப்பட்டிருப்பான்!
என் யூகமும் அதுதான்! பால்ஸமிலிருந்து சுமார் இரண்டு மைல் தொலைவில்தான் நாம் இருக்கிறோம்.. நமக்கு கிடைத்திருக்கும் அரிய வாய்ப்பு இது!



மரணக் கணவாய்
கெட்ஸம் அங்கே இருந்தால் கூடவே கிட் கார்ரியையும் நாம் எதிர்பார்க்கலாம்!
ஒரே முயற்சியில் இருவரையும் பிடிக்க முடிந்தால்.. அடடா.. எவ்வளவு நன்றாக இருக்கும்!
இதற்கிடையே -
அந்த அக்கிரமக்காரர்கள் கதவை தகர்த்து உள்ளே புகு முன் பெட்டகத்தில் உள்ள பணத்தை அகற்றி வேறொரு இடத்தில் மறைவாக பத்திரப்படுத்திவிடப் போகிறேன்.
கதவில் தொங்கிய பூட்டை தோட்டாக்கள் சிதறடிக்க முயன்ற வினாடிகளில் பணத்தை மூட்டைகட்டி ஒரு மூலையில் போட்டு வைத்தான் அந்த மெயில் கார்டு.
PT
மறு வினாடி பூட்டு உயிரைவிட்டது..
திறந்து கொண் டது.. பார்!
டமீல்!
ஏறிவா உள்ளே.. சீக்கிரம்!



கதவை திறக்க மறுத்த உன் வீரத்திற்கு இந்தா பரிசு...
டடார்ர்!
சீக்கிரம்.. டைனமைட்டை வைத்துவிட்டு குதியுங்கள்.
வெளியே போய்த் தொலை!
முடிந்ததா?
ம்ம்.. வெளியே குதி!
டமாால்!


டைனமைட் வெடித்து ஓய்ந்ததும் மீண்டும் வேகனுக்குள் ஏறி புகை மண்டலத்தினூடே பாய்ந்து நெருங்கினார்கள்... பெட்டகத்தை!
ஆனால் அவர்கள் கண்ட காட்சி.. - அதிர்ச்சியும் கொதிப்பும் அடைந்தார்கள்..
காலி!
அது - டைனமைட்!
விளங்குகிற தல்லவா.. உனக்கு அதற்கு அர்த்தம்?
மெயில் வேகனை தகர்த்திருப்பார்கள்!
அதோ.. இரயிலின் வெளிச்சம் தொலைவில் தெரிகிறது..
இதற்கிடையே-
சொல்லித் தொலை... மூண்டமே- பணம் எங்கே போயிற்று?
கும்!
போன நிறுத்தத்தில் கம்பெனி ஆட்கள் வந்து எடுத்துப் போய்விட்டார்கள்... ஒட்டு மொத்தமாக!



நாங்கள் இரயிலை இந்த இடத்தில் தாக்கப் போகிறோம் என்ற எப்படித் தெரியும் அவர்களுக்கு?
உஷ்ஷ்..! யாரோ வருகிற சப்தம் கேட்கிறது-கவனி!
கார்ஸன்.. நெருங்கிவிட்டோம்.. துப்பாக்கியை கையில் எடுத்துக் கொள்.
குதிரைகள்
கெட்டது போ!
ஓடிப் போய் விட வேண்டியதுதான்!
ஓடுங்கள்.. குதிரைகளை நோக்கி.
ஹீரோ என்று நினைப்பு - இல்லையா? இந்தா இதையும் வாங்கிக் கொள்!
யாரும் தலையை நீட்டக் கூடாது.. ஆமாம்!
டுமீல்
டுமீல்! டுமீல்!


முடிந்ததா?
இல்லை..! பெட்டி காலியாக இருந்தது..! ஏதோ பித்தலாட்டம் நடந்திருக்கிறது! ஓடி... வா!
நம் திட்டம் எப்படியோ முன் கூட்டியே அவர்களுக்கு தெரிந்து விட்டிருக்கிறது.. பணத்தை அப்புறப்படுத்திவிட்டார்கள்.
நாசமாகப் போக..
அதற்குள்
அதோ இருக் கிறார்கள்.. எஞ்சின் அருகே
அகப்பட்டுக் கொண்டு விட லாகாது..
பறந்தோடிப் போய்விட வேண்டும்.
டுமீல்!
டுமீல்
திருப்பித் தாக்க முயற்சிக்க வேண்டாம்.. சீக்கிரமே இருள் போர்வை நம்மை போர்த்து விடும்!


ஙீஙீ०००
ஏய்.. கார்ஸன்- ஜாக்கிரதை!
கீழே.. பார்!
நான் இவனை கவனிக்கவேயில்லை..! நல்லவேளை - குதிரையை மேலே செலுத்த விருந்தேன்!
செத்து விட்டானு?
இல்லை... அதிர்ச்சியில் ஏற்பட்ட மயக்கம் - அவ்வளவு தான்.
சரியான தருணத்தில் நாம் இங்கே வந்து சேர்ந்திருக் கிறோம்.. இல்லையேல் இவன் கணக்கை முடித்திருப் பார்கள். ஆனால் இன்னும் கொஞ்சம் முன்னதாக வந்திருந்தால் கொள்ளையையும் தடுத்திருக்கலாம்.
..மயக்கம் தெளிகிறது!
அடி பல மில்லையே?
இல்லை என்று தான் நினைக் கிறேன்.. அந்த நீசர்கள் என்னவா னார்கள்?
ஓடிப் போய்விட்டார்கள்... இனி, விடிந்த பிறகுதான் அவர்களுடைய தடத்தை பின் தொடர்ந்து விரட்டிச் செல்ல முடியும்.
அவர்கள் தப்பியோடி விட்டாலும் பணம் என்னவோ பத்திரமாகத்தான் இருக்கிறது!



கதவை தகர்த்து அவர்கள் உள்ளே நுழைய முயன்ற நேரத்தில் பணத்தை பெட்டகத்திலிருந்து அப்புறப் படுத்திவிட்டேன்.
வெகு சாமர்த் தியமான காரியம்தான்!
கிழக்கு வெளுத்ததும் நானும் என் நண்பனும் அவர்களை பின் தொடர்ந்து செல்ல உத்தேசித்துள்ளோம்.. இரயிலை ட்ரினிடாட்டுக்கு ஒட்டிச் சென்று இங்கே நடந்ததை பற்றி அங்கே புகார் செய்யுங்கள்.
எங்களுக்கு உதவ யாராவது நினைத்தால் எங்களோடு வரலாம். இல்லையேல், நாங்கள் இருவர் மட்டும் தனியாக செல்வோம்.
உங்களுக்கு உதவி நிச்சயம் கிடைக்கும்.. ஸார்!
பாதிப்புக்குள்ளான இரயில்வே கம்பெனி யினர் நிச்சயமாக திறமைசாலிகள் சிலரை உங்களோடு அனுப்பி வைப்பார்கள்.
வரவேற் கிறோம்!
சரி கிளம்புங்கள்.. எவ்வளவு சீக்கிரம் ட்ரினிடாட் போய்ச் சேருகிறீர்களோ அவ்வளவு நல்லது.
வாஸ்தவம் தான் ஸார்!
சற்றைக்கெல்லாம் புகையை உமிழ்ந்து கொண்டு, விசிலடித்துக் கொண்டு தன் பயணத்தை தொடர்ந்தது அந்த இரயில்.
கரியை தாராள மாக வாரிப் போடு.. பார்ட்!


இதற்கிடையே-
இனி நாம் சற்று நிதானமாக போகலாம் தோழர்களே.. நம்மை யாரும் விரட்டிக் கொண்டு வரவில்லை..
வெட்டிப் பொழுதாக போய்விட்டது இன்றைய இரவு.
அதை நினைவூட்டி என் எரிச்சலை கிளப்பாதே! குறைந்தது இருபதினாயிரம் டாலர்களாவது பெட்டகத்தினுள் இருக்கும் என்று எதிர்பார்த்தேன்..
அடுத்து?
ஸ்பிரிங்கருக்குப் போவோம்.
அங்கிருந்து தலைவரோட தொடர்பு கொள்ள முயற்சிப்போம்!
ஆனால் வழக்கமான பாதையில் நாம் செல்லப் போவதில்லை. கிமார்ரான் எல்லையை சுற்றிக் கொண்டு டார்க்கி கணவாயை நோக்கிச் செல்வோம்... எட்டு மைல் தொலைவுக்கு பாறை மீது செல்வோமாதலால் செவ்விந்தியர்களால் கூட நம் தடத்தை கண்டறிந்து பின் தொடர்வது சாத்தியப்படாது!
கெட்லமும், கர்ரியும் டெக்ஸின் கூரிய மதிநுட்பத்தை கணக்கில் எடுத்துக் கொள்ளத் தவறிவிட்டார்கள். மறுநாள் பிற்பகல் வேளையில் டெக்ஸின் தலைமையில் ஒரு சிறு கூட்டம் அந்த கயவர்களின் வழியில் பின் தொடர்ந்து சென்று கொண்டிருந்தது. பாறைப்பகுதியில் எவ்வித தடயமும் கண்ணில் படாத போதிலும், உள்ளுணர்வின் தூண்டுதலால் குறிப்பிட்ட திசையில் மற்றவர்களோடு முன்னேறிச் சென்று கொண்டிருந்தார் டெக்ஸ்.. திடீரென்று ஒரு கட்டத்தில்...
ஏதாவது தென்பட்டதா.. டெக்ஸ்?
நில்லுங்கள்..


ஆமாம்...! நான் எதிர்பார்த்ததுதான்! கிமார்ரானுக்கு சற்று முன்னதாக தடங்கள் இரு பிரிவாக பிரிந்து சென்றன அல்லவா.. நம்மை திசை திருப்பும் முயற்சி அது.
..இரு பிரிவுகளாக பிரிந்து நதிக்கரையின் இரு கரையிலும் தனித் தனியாக பயணம் செய்த குழுக்கள் மீண்டும் இங்கே ஒன்று சேர்ந்து கொண்டதை இங்கே தென்படும் தடங்கள் நிரூபிக்கின்றன.
இந்த தந்திரத்தினால் அவர்களை நாம் பின் தொடர்வதை தவிர்த்துக் கொள்ள முடியும் என்று அவர்கள் மனப்பால் குடித்திருக்கலாம்!
வாஸ்தவம் தான்!
அதிரடியாக தாக்க இது ஏற்ற இடம்.. ஒரு வேளை நாம் இங்கே வந்து சேர்ந்தால் நம்மை தாக்க இங்கே அவர்கள் திட்ட மிட்டு காத்திருக்கலாம்.
சரியான கணிப்பு... வில்லர்.
இன்னும் இரண்டு மணி நேரம் இருக்கிறது இருள் கவிழ. தொடர்ந்து மேலே செல்வோமா?
எனக்கு சம்மதம் தான்..!
ஆனால் - இருட்டிய பிறகும் நாம் பயணத்தை தொடர்வது தான் நல்லது என்பது என் கருத்து!
அது ஆபத் தானது.. ஷெரீப்!


எனக்கும் அது புரியாமலில்லை - ஆனால் அவர்களுக்கும் நமக்கும் இடையேயுள்ள இடைவெளியை குறைக்க அது வகை செய்யும்..!
ஓ.கே.!
கணவாயினுள் நாம் பிரவேசித்த வினாடி முதல் எப்போதும் விழிப்போடு இருக்க வேண்டும் என்று உங்களுடைய ஆட்களை எச்சரித்து வையுங்கள்... எந்த ஒரு பாறைக்குப் பின்னாலும் மரணம் நமக்காக காத்திருக்கலாம்!
இருள் கவிழும் வேளையில் டார்க்கி கணவாயின்-நுழைவுப் பகுதியை சென்றடைந்தது அந்தக் குழு..
பில்! ஸ்டீவ்..! டாம்..! விளக்கை ஏற்றுங்கள்!
கையில் விளக்கோடு போவது புத்திசாலித் தனம் தானா?
எதிரிகளுக்கு நம்மை அது காட்டிக் கொடுத்து விடலாம்!
கெட்ஸம் கும்பலுக்கு மண்டையில் கொஞ்சமாவது மசாலா இருந்தால் நுழைவாயில் அருகிலேயே பதுங்கிக் கிடக்கக் கூடும் - தங்களை யாரும் பின் தொடர்ந்து வரவில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள! அந்நிலையில் நாம் கையில் விளக்கோடு நுழைந்தால் தோட்டாக்கள் தான் நம்மை வரவேற்கும்.


அதே சமயம்..
கேட்டாயா?
உஷ்ஷ்.. தாக்கு வதற்கு ஆயுத் தமாக இரு!
இங்கே தரை மெத்தென்றிருக்கிறது.. தடம் இருந்தால் நிச்சயம் கண்டுபிடித்து விட முடியும்.. என்னை பின் தொடர்ந்து வாருங்கள்!
அவர்கள் கொஞ்ச தூரம்தான் உள்ளே போயிருப்பார்கள். அங்கே நிலவிய ஆழ்ந்த மௌனத்தை கலைத்துக் கொண்டு எழுந்தது ஒரு முரட்டுக் குரல்...
சுடுங்கள்!
டுமீல்! டுமீல்!
இரத்த வெள்ளம்
ஆஆ..!
அதிரடி தாக்குதல்!


டுமீல்!
டுமீல்!
ஓடிப் பதுங் குங்கள்..
ஆவ்வ்..
டுமீல்!
தொலைந் தோம்! எதிரி களில் ஒருவன் நமக்குப் பின்னால் இருக்கிறான்!
அப்படியில்லை ஷெரீப்.. உங்களுடைய விளக்கை சுட்டது எதிரியல்ல.. நான்தான்!
குறி லேசாகத் தப்பியிருந்தாலும் நான் அம்பேலாகியிருப்பேன்
நீங்கள் மட்டும் அந்த லாந்தரை ஏந்திக் கொண்டே இருந்தால் நேராக சொர்க்கத்திற்கு 'ஒன்-வே' டிக்கட் வாங்கிக் கொடுத்து விடுவார்கள்!
எக்கச் சக்கமாக மாட்டிக் கொண்டு விட்டோம் போலிருக் கிறது!
க்ராக


திருப்பி சுடுவதை நிறுத்த வேண்டாம்! நிழலை குறி வைத்து தோட்டாக்களை வீணடிப்பதையும் தவிர்க்க வேண்டும்!
டுமீல்! டுமீல்!
ஆவ்வ்!
இந்த கும்மிருட்டு நாசமாகப் போக... எதிரிகளுக்கு எங்கள் இருப்பிடம் தெரிந்துவிட்டது.. ஆனால் அவர்களில் ஒருத்தன் கூட கண்ணில் படவில்லை..
வாங்கிக் கட்டிக்கொண்டது போதும் என்றால் பேசாமல்...
டுமீல்!
..துப்பாக்கியை கீழே போட்டுவிட்டு வெளியேறி வந்து மரியாதையாக சரண- ஆஆ..!
டுமீல்!



ஆ.. போச்சு.. என் கை!
முட்டாளே.. என்ன காரியம் செய்தாய்?
ஹே.. ஸாம்! ராபினுக்கு தோட்டா காயம்... வந்து ஒரு கை கொடு!
இதோ..!
டுமீல்! டுமீல்!
அஹ்..!
இந்த கும்மிருட்டிலும் எப்படித்தான் கச்சிதமாக குறி வைக்க முடிகிறதோ.. அவர்களால்?
கிட்.. உதவி தேவையா?
இல்லை.. நானும் ஸாமும் ராபினை கவனித்துக் கொள்கிறோம்.. நீ ரேஞ்சர் களை கவனித்தால் போதும்!
அவர்களில் எவரும் உயிரோடு இந்த இடத்தை விட்டு வெளியேறப் போவதில்லை.. அத்தனை பேரையும் நான் ஒருவனே பலி கொண்டுவிடுவேன்.. பாரேன்!
டுமீல்!


ஆஆஆ..
தலையை வெளியே நீட்டி விடாதே!
ஹே.. டெக்ஸ்! மேலே வானத்தை கவனி!
சற்று நேரத்தில் மேகங்கள் விலகி நில வொளி இருட்டை விரட்டப் போகிறது!
அதாவது.. நாம் - ஹே..!
குனிந்து.. பதுங்கு - முதலில்!
டுமீல்! டுமீல்!
சைத்தானே!
கிட்! நாம் உடனடியாக இங்கிருந்து தப்பி ஓடாவிட்டால் நம் உயிருக்கு உத்தர வாதம் கிடையாது..!
உண்மைதான்! போய் குதிரை களை இங்கே கொண்டு வா!
கவலைப்படாதே உன்னை இப்படியே விட்டுச் சென்றுவிட மாட் டோம்!


ஸாம்..! இங்கிருந்து புறப்படுமுன் நீயும் நானும் சேர்ந்து அந்த சைத்தான்களை நோக்கி சரமாரியாக ஒரு முறை சுட்டால் என்ன?
ஓ.. செய்யலாமே!
ஆவ்வ்!
ஆவ்வ்..!
ஸாம்!
நாசமாகப் போக!
ஸாம்..! என்ன ஆயிற்று? குதிரைகள் இருக்கும் இடத்திற்கு உன்னால் போக முடியு மில்லையா?
நீயும் ஸாமும் முடிந்தவரை வேகமாக நடங்கள்.. நான் பாதுகாப்பு கொடுக்கிறேன்!
ஸாம்... என் மீது சாய்ந்து கொள்!


காயமடைந்த அவ்விருவரும் ஒருவருக்கொருவர் ஆதரவாக இணைந்து நடந்து குதிரைகள் நின்றிருந்த இடம் நோக்கி மெள்ள முன்னேறினார்கள்.
டுமீல்! டுமீல்!
ஆனால் - சில தப்படிகள் மட்டுமே வைக்க முடிந்தது ஸாமுக்கு. பின்னர் திடீரென்று சரிந்து விழுந்தான்.
ஊஹீம்.. மேலே நடக்க முடியவில்லை என்னால்..
கார்ரி.. இங்கே ஓடி வா!
ஸாம்... உன்னால் முடியாதா?
ஊஹீம்.. ஒரு ரைபிளை மட்டும் என்னிடம் கொடுத்து விட்டு நீங்கள் தப்பிச் செல்லுங்கள்.. என் கதை முடிந்த மாதிரிதான்!
மேகம் விலகி நிலா வெளியே வந்துவிட்டது... அந்த நச்சுப் பாம்புகளை இப்போது நாம் பார்க்க முடியும்!
டுமீல்! டுமீல்!
டுமீல்! டுமீல்!
அதிர்ஷ்டம் உங்களுக்கு துணை புரியட்டும்!
ஸாம்.. நாங்கள் வருகிறோம்!


சற்று நேரம் கழித்து -
அதோ.. ஒருவன்!
சுடாதீர்கள்! தோட்டாவை அநியாயமாக வீணடிக்காதீர்கள்!
படுபயங்கரமாக காயமடைந்திருக்கிறாய்.. ஏகப்பட்ட இரத்த இழப்பு ஏற்பட்டிருக்கிறது!
சிகரட் இருந்தால் ஒன்று கொடுங்களேன்!
தருகிறேன்! மற்றவர்கள் எங்கே?
இப்படி வைத்துக் கொள்வோமே..! இங்கே தகிப்பாக இருக்கிறது என்று வெளியே காற்று வாங்க போயிருக்கிறார்கள்!
எப்படிக் கேட்டாலும் என்னிடமிருந்து உருப்படியான பதில் கிடைக்காது என்று தெரிந்தும் ஏன் அலட்டிக் கொள்கிறாய்?
கேட்டதற்கு பதில் சொல்- இல்லையேல் உன்னை..
ஷெரீப்.. துப்பாக்கியை உறையில் போடுங்கள்.
எங்களை ரொம்பவும்தான் அலைக்கழித்து விட்டாய் கெட்ஸம். ஆனால் இம்முறை நீ தப்ப முடியாது..! உனக்கு என்ன காத்துக் கொண்டிருக்கிறது என்று தெரியுமல்லவா?
தெரியாமல் என்ன?


'இரத்த வெறியர்கள்' கும்பலைச் சேர்ந்த ஒவ்வொருவருக்கும் தெளிவாகவே தெரியும் - முடிவில்.. தோட்டா அல்லது சுருக்குக் கயிறுதான் என்று!
சுருக்குக் கயிற்றைவிட தோட்டாவே மேல் என்பது என் விருப்பம்.
ஆனால் உன் விருப்பம் நிறைவேறும் என்று தோன்றவில்லை எனக்கு!
முடிந்தவரை நன்றாக கட்டுப் போடுங்கள் அவனுடைய காயத்திற்கு. டரினிடாட்டுக்கு அவனை எப்படியாவது உயிரோடு கொண்டு போய் சேர்க்க வேண்டும்.
முயற்சிக்கிறேன்!
அடுத்த என்ன டெக்ஸ்?
அவர்கள் போகட்டும் நாம் நிலவொளியில் தடங்களைப் பின் தொடர்ந்து செல்வோம்!
கெட்ஸமுக்கு காயயம் பலமா? பிழைத்துக் கொண்டு விடுவானா?
உயிருக்கு ஆபத்து வராது.. ஆனால் மீண்டும் அவனை நாம் எதிரணியில் சந்திக்கும் வாய்ப்பு இராது!
காஸிடிக்கு துணை நிற்பவர்களின் எண்ணிக்கை ஏராளம். ஆனால் அந்தப் பட்டியலிலிருந்து ஸாம் கெட்ஸமின் பெயரை இப்போதே நாம் நீக்கிவிடலாம்!
பத்து தினங்களுக்குப் பின், ஜுலை 24 ந்தேதி சிறையில் கெட்ஸம் மரணமடைந்தான் என்பது செய்தி.


இதற்கிடையே, கிட் கார்ரியும் மற்ற இரு நபர்களும் கடினமான பாறைப் பகுதியினூடே சென்ற குறுக்கு வழியில் விரைந்தனர்.
குதிரைகள் ரொம்பவும் களைத்துப் போய்விட்டன கிட்..! இங்கே சற்று இளைப்பாறிச் செல்வோம்!
கூடாது..! அந்த ரேஞ்சர்கள் நம்மை விரட்டிப் பிடித்துவிடும் அபாயம் இருக்கும் வரை நாம் பயணத்தை நிறுத்தவே கூடாது.
இந்த குறுகலான பாறைப் பகுதியில் அவர்கள் தடம் அறிந்து பின் தொடர்ந்து வருவது சாத்தியமே இல்லாத ஒன்று.
இருக்கலாம்! ஆனாலும் நாம் கொஞ்சம் ஜாக்கிரதை யாகவே இருப்பது நல்லதல்லவா? இன்னும் பத்து மைல் தொலைவு சென்று விட்டோமேயானால் ஆபத்து கணிசமாக குறைந்துவிடும்!
வழியில் சந்தித்த நம்பிக்கையான சகாக்களிடம் குதிரைகளை மாற்றிக் கொண்டு தொடர்ந்து பயணம் செய்த அம்மூவர் குழு ஒருவழியாக மெக்ஸிகன் எல்லையோரம் இருந்த தங்கள் நண்பர்கள் குழாமோடு போய் சேர்ந்து கொண்டது..
ஸாம் கெட்ஸம் பற்றி செய்தி ஏதேனும் உண்டா?
பால்ஸமில் இரயிலை தாக்கியது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. எனவே, கொஞ்ச நாட்களுக்கு நாம் வெளியே தலைகாட்டாமல் பதுங்கியே கிடப்பது நல்லது..


ஹும்ம்.. இப்படியொரு பரிதாப முடிவு அவனுக்கு ஏற்படும் என்று நம்மில் யாருமே கற்பனையாகக் கூட நினைத்துப் பார்த்ததில்லை. ஸாண்டா ஃபே சிறையில் அடைக்கப்பட்ட கெட்ஸம் ஒரு வாரம் கழித்து செத்து விட்டானாம்.
எல்லாம் அந்த வில்லரால் வந்த வினை..
கேள்விப்பட்டேன்..! அவருடைய தலையீடு எனக்கு இன்னமும் விளங்காத ஒரு புதிர்.. வெகுமதி தொகை ஒரு காரணமாக இருக்க முடியாது.
எங்களை விரட்டி வந்த குழுவை வில்லரும்,
கார்ஸனும் முன்னின்று வழி நடத்தி வந்தார்கள்.
வில்லர் நமக்கு எதிராக கிளம்பி யிருப்பது நம் துரதிர்ஷ்டமே.
அவரை ஒழித்துக்கட்ட நானாயிற்று!
ஆனால் அது சுலபமான காரியம் அல்லவே!
எனக்குத் தெரி யாதா என்ன?
நேரடியாக மோதல் என்று வந்தால் நம் மால் வெற்றி கொள்ள முடியாதுதான். ஆனால் வஞ்சகமாக வலைவீசி வீழ்த்தப் போகிறேன்!
உருப்படியாக ஏதாவது செய்!
ராபினை பலியாடாக வைக்கப் போகிறேன். படுகாயமடைந்த அவன் இன்னமும் ரொம்ப பலவீனமா கத்தான் இருக்கிறான்... அவன் செத்துப் போனால் நஷ்டம் அதிகம் இல்லைதான்!
விஷயம் ராபினுக்குத் தெரியாமல் பார்த்துக் கொள்.



கிட் கார்ரியை எப்படியும் தேடிக் கண்டு பிடித்து விடுவது என்று, விடாமுயற்சியாக அந்த பிராந்தியம் முழுக்க சல்லடைபோட்டு சலித்துக் கொண்டிருந்தனர் டெக்ஸும், கார்ஸனும்! முடிவில் ஒரு நாள் மாலையில் -
?
ஹே.. யாருடைய சேஷ்டை இது?
கிராவ்ஷ்!
இரவில் வந்த சேதி!
ஓடிப்போய் ஜன்னல் வழியே எட்டிப் பார்.. கார்ஸன் - கத்தியை எறிந்த போக்கிரி யாரென்று!
?
யாரோ ஒரு மெக்ஸிகன்.. புயலென பறந்தோடுகிறான் - தெருக்கோடிக்கு போய்விட்டான்.. அடையாளம் கண்டு கொள்ளக் கூட வழியில்லை.



ஹூம்.. உடைந்து போன ஜன்னலுக்குரிய நஷ்ட ஈட்டுத் தொகையை நாம்தான் அழ வேண்டும்!
புலம்பாதே.. கார்ஸன்!
இதில் உள்ள செய்திக்காக நாம் அதற்கு மேலும் கொடுக்கலாம்!
ஏன்.. யாராவது நம் பெயரில் சொத்தை எழுதி வைத்துவிட்டு மண்டையை போட்டு விட்டார்களா?
நீயே படித்துப் பார்!
அடடே... சுவாரஸ்யமான சங்கதிதான்!
கிட் கர்ரிக்கு காயம்.. ஆனால் லேசானது தான். கார்ல்ஸ்பாடிலிருந்து செல்லும் வழித் தடத்தில் ஐந்தாவது மைலில் இருக்கும் ஒரு பாழடைந்த பண்ணை வீட்டில் பதுங்கிக் கிடக்கிறான். இரண்டு தினங்களுக்கு ஒரு முறை மில்டன் அவனுக்கு உணவு கொண்டு போய் கொடுத்து வருகிறான். - ஒரு நண்பன்
நீ என்ன நினைக் கிறாய் - இதைப் பற்றி?
இதை எழுதிய நபர் கிட் கர்ரி தூக்கில் தொ ங் குவதை காணத் துடிக்கிறார் என்று நினைக் கிறேன்.
அதே சமயம் இது எதிரிகளின் வலைவீச்சாகவும் இருக்கலாம்.. உண்மை என்னவென்று தெரிந்து கொள்ள முயற்சிப்போம்!
எப்படி?


அந்த பாழடைந்த பண்ணை வீட்டை கண்டு பிடிப்பது ஒன்றும் கஷ்டமாயிராது.. அங்கே போய் சுற்று வட்டாரத் தில் பரவலாக நோட்டம் விடுவோம் - சரிதானா?
மில்டன் பற்றியும் சொல்லப்பட்டிருக்கிறது. ஒருவேளை அவன் எதிர்பட்டால் அவனையும் சேர்த்து அமுக்கி விடுவோம்!
ஒரே கல்லில் இரண்டு மாங்காய்- அப்படித் தானே?
முதலில் ஷெரீப்பின் ஆபீஸுக்கு போவோம்..!
சில நிமிடங் களுக்குப் பின்-
உள்ளே வரலாம்!
SHERIFF
ஓ.. வில்லர்! உன்னைப் பற்றித்தான் நினைத்துக் கொண்டிருந்தேன்.. வந்து விட்டாய்!
இவன் - பில் ஹார்டின்! எனக்காக வேவு பார்த்து வரும் ஒற்றன் - திறமைசாலி!
ஹலோ..!


பில்.. சற்று முன் நீ என்னிடம் கூறியதை மீண்டும் ஒரு முறை சொல்.. இவர்களும் தெரிந்து கொள்ளட்டும்!
வெகுமதி பற்றியும் சொல்லணுமா?
இவர்களுக்கு பணத்தின் மீதெல்லாம் ஆர்வம் கிடையாது பில்! இவர்களுக்கு 'இரத்த வெறியர்கள்' கும்பலை வளைத்து, கூண்டிலேற்றி தூக்கில் தொ..ங்கவிட வேண்டும் - அவ்வளவுதான்!
சரி.. சொல்கிறேன்! மில்டன் இன்று காலையில் ஒரு பாழடைந்த பண்ணை வீட்டிலிருந்து வெளியேறிச் செல்வதை கண்டேன்.
தற்செயலாக அவ்வழியே சென்று கொண்டிருந்த நான் அந்த பண்ணை வீட்டருகே ஒரு வண்டி நிற்பதைக் கண்டு துணுக்குற்றேன். உடனே அருகே இருந்த தோப்பினுள் ஒளிந்து நின்று பைனாகுலர் மூலம் அங்கேயே குறியாக கவனித்துக் கொண்டிருந்தேன்.
பதினைந்து நிமிடங்களுக்குப் பின் மில்டன் வெளியேறி வந்து, வண்டியிலேறி வேகமாக ஓட்டிச் சென்றான்.
மில்டன் தான் என்று நிச்சயமாகத் தெரியுமா?
சர்வ நிச்சயமாகத் தெரியும்! ஏனெனில் அந்த சைத்தான் என்னைக் கொல்ல பல முறை நெருக்கத்தில் வந்திருக்கிறான்.


சரி.. மேலே சொல்!
யாரும் தன்னைப் பின் தொடர்கிறார்களா என்று திரும்பித் திரும்பி பார்த்துக் கொண்டே சென்றான். பௌடர் கிரீக் செல்லும் சாலையில் சென்ற அவனை பின் தொடர்வது உசிதமல்ல என்று தோன்றியது..
எனவே, என் மறைவிடத்தை விட்டு நான் வெளியே வரவே வில்லை. அரை மணி நேரம் கழித்து, அக்கம் பக்கத்தில் நடமாட்டம் ஏதும் இல்லை என்பதை ஊர்ஜிதம் செய்து கொண்ட பின்னர் வெளியேறி வந்து பண்ணை வீட்டை நோக்கி நடந்தேன்.
பூனை போல் சந்தடி செய்யாமல் மெல்ல நடந்து சென்று ஜன்னல்களின் வழியே இரகசியமாக நோட்டம் விட்டேன். உள்ளே யாரோ இருப்பது உறுதியாகத் தெரிந்தது..
ஆனால் நபர் யாரென்று அடையாளம் தெரியவில்லை. காரணம் அவனுடைய முதுகு மட்டுமே தென்பட்டது. எதிர் திசையில் வேறு ஜன்னல் இல்லை. ஆனால் அந்த ஆசாமி 'இரத்த வெறியர்கள்' கும்பலில் ஒருவன் என்பது மட்டும் நிச்சயம்.
அப்படி நீ சொல்லக் காரணம்?
உள்ளே இருந்தவன் காயமுற்றிருந்தான். ஆனால் படு மோசமான நிலையில் இல்லை என்பதும் புரிந்தது. இந் நிலையில் டாக்டரை தேடி போகாமல் பாழடைந்த பண்ணை வீட்டில் பொழுதைக் கழிக்க தீர்மானித்த நபர் வேறு யாராக இருக்க முடியும்?
நமக்கு கிடைத்த செய்தியோடு இது ஒத்துப் போகிறது - அல்லவா?
நானும் அதையேதான் நினைத்தேன் -சொல்லி விட்டாய்!


அதாவது அந்த பாழடைந்த பண்ணை வீட்டில் யாரோ இருக்கிற விஷயம் உங்களுக்கு ஏற்கனவே தெரியுமா என்ன?
ஆமாம்.. அரைமணி நேரத்திற்கு முன்னர் தான் கேள்விப்பட்டோம்.. அந்த நபர் யாரென்று கூட எங்களுக்குத் தெரியும்.
கிட் கார்ரி!
நிஜமாகவா..? பிடித்துக் கொடுத்தால் பரிசுத் தொகை மூவாயிரம் டாலர்களாயிற்றே!
நாம் சாமர்த்தியமாகவும், விரைவாகவும் செயல்பட்டால் அந்த பரிசுத் தொகை உனக்கும், ஹார்டினுக்கும் சொந்த மாகிப் போகும்.. நானும், கார்ஸனும் நேராக அங்கேதான் விரைகிறோம்.
நாளை காலையில் நீ ஆட்களோடு அங்கே வந்தால் கிட் கார்ரியை கைது பண்ணி அழைத்துக் கொண்டு வரலாம்.
நிச்சயமாக வருவேன்!
அரை மணி நேரம் கழித்து -
அதோ.... கிளம்பி விட்டார்கள்! அவர்கள் எந்த விஷயத்தையும் ஆறப்போடுவதே கிடையாது!
LIVERY STABLE


ஷெரீப்பையோ, வேறு ஆட்களையோ உடனழைத்துச் செல்லாமல் அவ்விரு வரும் தனியாகவே போகிறார்கள்..
கிட் யூகித்த மாதிரியே!
ஓ.கே. அவர்கள் போகட்டும்.. நாம் காப்பர் ஹில் நோக்கிச் செல்வோம். தகவலை உடனே தனக்கு தெரிவிக்க வேண்டும் என்று கிட் சொல்லியிருக்கிறார்.
இதற்கிடையே-
நமக்கு கடிதம் எழுதிய நபர் யாராக இருக்கும் என்று நீ நினைக்கிறாய்.. டெக்ஸ்!
யாரோ ஒருவன் - கிட் கார்ரியை பிடிக்காதவன்! ஏன் கேட்கிறாய்?
இல்லை.. என் நெஞ்சுக்குள்ளே குறுகுறுக்கிறது..
விஷமத்தனம் இருக்கும் என்று நீ சந்தேகப்படு கிறாயா?
ஆமாம்.. எங்கோ உதைக்கிறது!
அப்படியே இருந்தாலும் உண்மையை நாம் விரைவிலேயே தெரிந்து கொண்டு விடலாம்..!


பண்ணை வீட்டை நெருங்கியதும் அக்கம் பக்கத்தில் நன்றாக நோட்டம் விடுவோம். யாரும் மறைந்திருந்து அதிரடியாக நம்மீது பாய முடியாது என்பதை ஊர்ஜிதம் செய்து கொண்டு, வசதியான இடம் பார்த்து பதுங்கிக் கிடப்போம் - விடியும் வரை!
அவ்வாறே எல்லா முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொண்ட பின் கால்நடைகளை அடைத்து வைக்கும் பட்டியில் மறைவாக பதுங்கிக் கொண்டார்கள் டெக்ஸும் கார்ஸனும்..
எவ்வித நட மாட்டமும் இல்லை.
பாழடைந்த பண்ணை வீட்டில் வேறு யாருக்கு ஆர்வம் இருக்க முடியும்?
உள்ளே என்னதான் நிலவரம் என்று தெரிந்து கொள்ள் கொஞ்சமாவது வெளிச்சம் அவசியம்.. கிழக்கு வெளுக்கும் வரை நாம் காத்திருக்கத்தான் வேண்டும்..
விடி காலையில்
வா.. போவோம்!
துப்பாக்கி விசையில் விரலை வைத்தவாறு மெதுவாக அந்தப் பண்ணை வீட்டை நோக்கி நடந்தார்கள்..


மெள்ள டெக்ஸ்..! அவன் சுதாரித்துக் கொண்டு விடலாகாது!
ஒரே அமுக்காக அமுக்கி விடலாம்.. கவலைப் படாதே
மறு நிமிடம்!
மடோர்ர்!
தூக்கு கைகளை!
?
துப்பாக்கியை எடுக்க நீ முயற்சி செய்தால் உன்னை சுட எனக்கு தேவைப்படும் காரணம் கிடைத்துவிடும்.
அக்கிரமம்..!
என்னை காட்டிக் கொடுத்த நாய் யார்?
சொல்வதற்கில்லை..!


டெக்ஸ்... இவன் கிட் கர்ரி இல்லை.
அப்போதே தெரிந்து கொண்டேன் கார்ஸன்! ஆனாலும் செய்தியில் பாதி
உண்மை இருக்கிறது.
ஆக இங்கே கிட் காரியை எதிர்பார்த்து வந்தீர்களா? என்னைக் கண்டு ரொம்பவும் தான் ஏமாற்றமடைந்து விட்டீர்கள் போலிருக்கிறது!
நீ யார்?
ராபின் ! என்னை காட்டிக் கொடுத்தவன் யாரென்று இப் போதாவது சொல்லலாமா?
இல்லை...!
எங்களுக்கு தகவல் சொன்ன நபர் யாரா யினும் அவனுடைய பெயர் உனக்கு தெரிந்திருக்க முடியாது என்று நினைக்கிறேன். சரி.. எழுந்திரு! அங்கே கார்ல்ஸ் பாட் சிறைச்சாலை உன் வரவுக்காக காத்துக் கொண்டிருக்கிறது!
சுமார் அரைமணி நேரம் கழித்து ஷெரீப் தன் பரிவாரங் களோடு அங்கே வந்து சேர்ந்தார் - பிரபல சமூக விரோதி கிட் கர்ரியை கைது செய்து கொண்டு போகும் பேராசையோடு!
ராபின்
நாம் எதிர் பார்த்த அளவு பெரிய மீன் இல்லை இது ஷெரீப்!
செய்தியில் கிட்கர்ரி என்று தெளிவாக சொல்லப்பட்டிருந்ததே!
ஆமாம்!



கர்ரியை பற்றியோ ராபினைப்பற்றியோ சரியாக தெரியாத நபர் அந்த தகவலை நமக்கு எழுதி அனுப்பியிருக்கக்கூடும்..
இனியும் இங்கே நிற்பதில் நேரம்தான் வீணாகும்!
சரி.. இனி-திரும்பி செல்ல வேண்டியது தானா?
ஆமாம்! இங்கிருந்து இனி பிரயோஜனமில்லை!
சரி.. புறப் படுவோம்!
அதே சமயம் - பண்ணையிலிருந்து கார்ல்ஸ்பாட் செல்லும் வழியில் உள்ள பாலத்தில்...
முடிந்ததா?
தயாராகி விட்டது!
சரி.. திரியை பாறையின் பின்னால் கொண்டு வா நாம் அவர்களை எதிர்பார்த்து அங்கே மறைந்திருப்போம்.
பாலத்தின் அடியில் டைனமைட்டை வைத்துவிட்டு கர்ரியும் அவனது சகாக்கள் மூவரும் பெரிய பாறை ஒன்றின் மறைவில் காத்திருந்தார்கள். சற்றைக்கெல்லாம்..
அதோ வருகிறார்கள்..



வஞ்சக வலை!
அவர்களோடு ராபினும் இருப்பானா?
இருக்கலாம்..! எதிர்த்து போராட அவன் உடம்பில் திராணி கிடையாது.
ஆமாம் - அவனும் வருகிறான் அவர்களோடு!
வில்லருக்கும் கார்ஸனுக்கும் வலப்பக்க மாக வந்து கொண்டிருக்கிறான்..
ராபினை எப்படியாவது ஒதுக்க வேண்டுமே!
அவசியம் இல்லை..! சரி- முயன்று பார்!
ஹே.. ராட்! நாங்கள் சுட ஆரம்பித்ததும் நீ தீயை வைத்துவிட வேண்டும்- தயாராக இரு!
நான் ரெடி!
அடுத்து..
அந்த செய்தி பற்றி உனக்கு உள்ள சந்தே கம் நியாயமானதுதான் கார்ஸன். அதில் ஏதோ சூது இருக்கும் போலிருக்கிறது.
?


அந்த நபருக்கு கர்ரியையோ, தெரியாதிருக்கலாம் என்று நீ சொன்ன சமாதானம் எனக்குப் போதுமானது..
ஆனால் எனக்கு திருப்தி யில்லை.
நேர் எதிராக நான் கணிக்கிறேன். அந்த செய்தியை அனுப்பியவர்களின் நோக்கம் கர்ரியை நம் கையில் ஒப்படைப்பது அல்ல.. வேறு உள் நோக்கம் ஏதோ இருக்கக்கூடும் என்று இப்போது தோன்றுகிறது.
நீ.. என்னதான் சொல்ல வருகிறாய்?
விளக்கமாக எனக்கு சொல்லத் தெரியவில்லை.. ஆனால் அந்த செய்தி மேலோட்டமாக நமக்கு உதவ அனுப்பப் பட்டதுபோல் தோன்றினாலும், நமக்கு குழி பறிக்க இது ஒரு உத்தியோ என்று ஒரு உறுத்தல். போகப் போக உண்மை தானாக வெளிச்சத்திற்கு வரக்கூடும்.
ரெடி..! அவர்கள் பாலத்தினுள் வந்த வுடன் சுடத் தொடங்க வேண்டும்!
சரி!
உதாரணமாக நமக்கு வலை விரிக்க ஒரு நபர் திட்டமிடுகிறார் என்று வைத்துக் கொள்.. அப்போது -
டெக்ஸ்.. அந்த பாறையின் பின்னால் பாரேன்..


டுமீல்! டுமீல்!
ராபின் .! இந்தப் பக்கமாக ஓடி வந்துவிடு!
மாட்டிக்கிட்டோம்
க்ராக்!
ப்யூஸை கொளுத்து!
இதோ!
ராபினை போகவிடாதே - தடுத்து நிறுத்து!
இதோ -
எங்களை விட்டுவிட்டு நீ மட்டும் போனால் எப்படி?
த்ராஷ்!


ஹீ ஹீ!
டுமீல்! டுமீல்!
தொப்!
சே.. நாசமாகப் போக!
ஹீ. ஹீ!
தொப்!
வாப்பா டெக்ஸ்! துணைக்கு ஆள் இல்லையேன்னு நினைச்சுக்கிட்டிருந்தேன்! சுகமா ஒரு குளியல் போடலாம்!


போலீஸ் படையை நோக்கி சுடுங்கள்.. ராபினை இனி நம்மால் காப்பாற்ற முடியாது
டுமீல்! டுமீல்!
ஐ..யோ!
டுமீல்! டுமீல்!
ஆஆ..
பாலத்தை விட்டு வெளி யேறுங்கள்.. சீக்கிரம்!
இனி சுடவேண்டிய அவசியம் இல்லை.... வாருங்கள்- ஓடிப்போய் விடலாம்!
பாவம் எந்த வினாடியிலும் தகர்ந்து விழக்கூடும்!


ஷெரீப்.. அங்கே கவனியுங்கள்- தப்பியோடு கிறார்கள்!
அவர்களை அவ்வளவு சுலபத்தில் விட்டு விடுவேனா என்ன..? விரட்டிப் பிடிப்போம்..
சிந்திக்காமல் செயலில் இறங்கினார் ஷெரீப்!
..வாருங்கள் என்னை பின் தொடர்ந்து! விடக்கூடாது!
துரத்திக் கொண்டு வருகிறார்கள்!
துரதிர்ஷ்ட சாலிகள்!
ஷெரீப் குழுவினர் பாலத்தின் மத்தியில் சென்று கொண்டி ருந்தபோது டமால் என்று வெடிச்சப்தம் எழுந்தது.
டமால்!
கடவுளே..!
ஏதாவது பறந்து வந்து நம் தலையில் விழுந்து வைக்கப் போகிறது.. விழிப்போடு இரு கார்ஸன்..
தொம்


பாலம் தவிடு பொடியாகி விட்டது.. டைனமைட்டை ஏராளமாக வைத்திருக் கிறார்கள்!
புதிராக நின்ற நம் கேள்விக்கு இப்போது விடை தெரிந்து விட்டதல்லவா?
இந்தக் கணத்திற்காகவே அந்தச் செய்தி நமக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. பாலத்தை குறிப்பிட்ட நேரத்தில் நம்மை கடக்க வைக்கவே அப்படியொரு ஏமாற்று நாடகம் ஆடப்பட்டிருக்கிறது.
அவர்களுக்கும் மண்டையில் நிறைய மசாலா இருக்கிறது!
அடேய்... இந்தக் கணத்தில் எனக்கு என்ன யோசனை தோன்றுகிறது தெரியுமா? உன்னை இப்படியே நிறுத்தி விட்டு நாங்கள் கரை சேர்ந்துவிடப் போகிறோம்... செத்த எலி மாதிரி நீ இப்படியே நீரில் மூழ்கி உயிரை விடப் போகிறாய்.
!
ஐயோ.. வேண்டாம்!
அவர்களோடு இவனுக்கு கூட்டு இருக்காது என்று நிச்சய மாக தெரிகிறது.. இல்லையேல், இவனுடைய நடவடிக்கைகள் வேறு மாதிரியாக இருந்திருக்கும்!
சத்தியமாகச் சொல்கிறேன்.. எனக்கு எதுவுமே தெரியாது.
இதற்கிடையே-
வாருங்கள் தோழர்களே போகலாம்.. இனிமேல் நமக்கு இங்கே என்ன வேலை?


உரிய தருணத்தில் ராபினை பாலத்திற்கு இந்தப் பக்கம் வரவழைக்க முடியாது போனது துரதிர்ஷ்டமே!
முட்டையை உடைக்காமல் ஆம்லெட் தயாரிக்க முடியாது தம்பி!
டெக்ஸையும், கார்ஸனையும் தீர்த்துக் கட்டிவிட்டதான திருப்தியோடு காஸிடியின் மறைவிடத்திற்கு போய்ச் சேர்ந்தது அந்தக் கும்பல். ஆனால், ஒரு வாரம் கழித்து..
ஹே..! இதைக் கேளுங்கள்!
கைது செய்து கொண்டுவரப்பட்ட ராபினை விசாரணை செய்தபோது, அவன் குற்றவாளிதான் என்பதை ஜூரிகள் ஏகமனதாக தீர்மானித்ததன் பேரில் அவனுக்கு ஆயுள் தண்டனை வழங்கப்பட்டிருக்கிறது.
?
அவனை ஸாண்டா ஃபே சிறையில் அடைக்க உத்தரவிடப் பட்டுள்ளது.
நிறுத்து கிட்! ராபின் உல்ஃப் கிரீக்கில் மூழ்கி மாண்டு விட்டதாக அல்லவா நீ சொன்னாய்?
அதுதான் எனக்கும் விளங்க வில்லை.. என் கண்களா லேயே நேரில்..
போதும் நிறுத்து கர்ரி! வில்லரையும், கார்ஸனையும் ஒழித்து விட்டதாக வேறு கதையளந்தாய்.. தூ..!
ஹீ..ஹீ..!
அவர்கள் தண்ணீருக்குள் விழுந்ததை பார்த்தேன்.. நிச்சயம் செத்துப் போயிருப்பார்கள் என்று நம்பிவிட்டேன்.



'இரத்த வெறியர்கள்' தனித்தனி கும்பலாக வெவ்வேறு மறைவிடங்களில் மேலிடத்திலிருந்து அழைப்பு அடுத்து எப்போது வரும் என்று காத்துக் கிடந்த வேளையில் டெக்ஸும், கார்ஸனும் ஓய்ந்து கிடக்கவில்லை. அவர்களுக்கு ஒரு புதிய தடயம் கிடைத்தது ஒரு தூண்டுகோலாக அமைந்தது.
அட எண்கள் கூட அதேதான்! யாரிட மிருந்து இதை வாங்கினீர்கள்!
டாட்ஸனுக்கு அருகில் வசிக்கும் நபர் எவரோ ஒருவர் கொடுத்தவை இவை!
இரத்த வெறியர்களால் இரயிலிலிருந்து கொள்ளையடிக்கப்பட்ட கரன்ஸி நம்பர்கள் பதிவு செய்யப்பட்டிருந்தன. அதே நம்பரைத் தாங்கிய டாலர் நோட்டு ஒன்று மதுபானக் கடைக்கு வந்திருந்தது!
லோனி லோகன் என்று ஷெரீப் சொல்கிறார். அவனுடைய அத்தைக்கு அப்பகுதியில் கொஞ்சம் நிலபுலன் உண்டு.
அருமையான வாய்ப்பு.. நழுவ விடக் கூடாது.. உடனே நாம் அங்கே செல்வோம்!
இந்த மோசமான பருவநிலையிலா?
இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தால் அவன் மீண்டும் நம்மிடமிருந்து தப்பித்துக் கொண்டு விடலாம்!
BANK
CENTRAL BANK DODSON
அவனை தேடி நாம் மாதக் கணக்கில் காடு மேடெல்லாம் அலைந்தது மறந்து போய்விட்டதா? கை எட்டும் தொலைவில் இருக்கிறான் இப்போது. கணப்பொழுதும் தாமதிக்கலாகாது!
மறுநாள் - அதாவது பிப்ரவரி 27 ந்தேதி காலையில் நீதியின் காவலர்கள் அந்த சிறிய பண்ணை வீட்டை நெருங்கிக் கொண்டிருந்தார்கள்.



இதற்கிடையே- உள்ளே..
லோனி.. யாரோ இருவர் இங்கே வருகிறார்கள்!
?
சட்டென்று பைனாகுலரை கையில் எடுத்து வெளியே பார்வையை ஓட்டினான் அந்த போக்கிரி..
வில்லரும், கார்ஸனும்..! நான் இங்கே நிற்கக் கூடாது!
நான் ஓடப் போகிறேன் ஆண்ட்டி... அப்புறமாக சந்திக்கலாம்.
லோனி! லோனி! வெளியே போகாதே!
ஆனால் அதை காதில் போட்டுக் கொள்ளாமல் துப்பாக்கியை தூக்கிக் கொண்டு வெளியே ஓடினான் லோனி..
அவர்களுடைய குதிரைகள் களைத்துப் போயிருக்குமாதலால் என்னை நெருங்க முடியாது.. நான் தப்பித்துக் கொண்டு விட முடியும்!


அங்கே பார்..
தப்பியோட நினைக் கிறானா..?


பார்த்து விட்டார்கள்.. சண்டாளர்கள்


சனியனே!
கீழே விழுந்து பதுங்கு கார்ஸன்
டுமீல்!

# பனியில் மரணம்!


டுமீல்!



என் குதிரையை நான் சென்றடை யாவிட்டால் நிச்சயம் மாட்டிக் கொண்டு விடுவேன்!
விஷ் விஷ்
குதிரை மீது ஏறவிடாமல் அவனை தடுத்து நிறுத் தியாக வேண்டும்!
லாயத்தை நெருங்கவே விடக்கூடாது!
டுமீல்!
டுமீல்! டுமீல்! டுமீல்!
அவர்களை தீர்த்துக் கட்டாதவரை நாம் என்றைக்குமே நிம்மதியாக தூங்க முடியாது.
டுமீல்!
ஆவ்..
டுமீல்!


அவர்கள் நாசமாகப் போக..
கார்ஸன்.. நீ வலப்பக்கமாக வந்து மடக்கு.. நான் இடப்பக்கமாக வருகிறேன்.
ஓ.கே.
டுமீல்!
அவர்களோடு துப்பாக்கிச் சண்டை போடத் தீர்மானித்து விட்டான் லோகன். ஓடிப் போய் பருத்த மரம் ஒன்றின் பின்னால் ஒளிந்து கொண்டு தன் துப்பாக்கியில் தோட்டாக்களை நிரப்பினான்.
இனிமேல் வாருங்கள்.. நேராக - நரகத்திற்கு வழி காட்டுகிறேன்!
முதலில் தென்பட்டவர் கார்ஸன்தான்! வெட்ட வெளியில் ஓடி வந்தவர் சட்டென்று பாய்ந்து, பனியில் பாதி மறைந்து கிடந்த விறகுக் குவியலின் பின்னால் தன்னை மறைத்துக் கொண்டார்.
சண்டாளன் சரமாரியாக சுடுகிறானே!
லோனியின் கவனம் கார்ஸன் மீது இருந்த அந்த தருணத்தை சாதகமாக பயன்படுத்திக் கொண்டு டெக்ஸ் சுடத் தொடங்கினார்.
டுமீல்!


ஆவ்வ்.. மயிரிழையில் தப்பித்துக் கொண்டேன்
ஓ.கே.. இப் போது நான் கொஞ்சம் வெளியில் தலை நீட்டலாம்.
டுமீல்!
லோகன்.. மரியாதையாக சரணடைந்துவிடு!
ஆனால் அவனோ அலட்சியமாக நகைத்தவாறு சரமாரியாக சுடலானான்.
அவனுடைய நெஞ்சை குறி வைக்க வேண்டிய நெருக்கடி உருவாகி விட்டதை உணர்ந்தார் டெக்ஸ்.
டுமீல்,
ஆ ஆ ஆ..



அதையடுத்து-
இவனுடைய கதை முடிந்து விட்டது.
உயிரோடு பிடிக்க முடிந்தி ருந்தால் நன்றாக இருந்திருக்கும்.
சரி வா.. அக்கம் பக்கத்தில் நோட்டம் விடுவோம்.
என்ன நீ எதிர் பார்க்கிறாய்.. இங்கே?
லோகன் இங்கே தனியாக இருந்தான்..
தெரியும்! தேடிப் பார்ப்பதால் ஒன்றும் நஷ்ட மாகிவிடாது. ஒருவேளை, கும்பலை சேர்ந்த மற்ற நபர்களைப் பற்றி ஏதாவது தடயம் கிடைக்குமா என்று பார்ப்போம்.
உள்ளே லோகனின் ஆன்ட்டி துயரத்தோடு அரற்றிக் கொண்டிருந்தாள்..
ரொம்பவும் வேதனைப் படுகிறோம் மேடம்.. ஆனால் எங்களுக்கு வேறு வழியில்லை..!
அவன் யோக்கியமான பையன்.. அவன் சட்டவிரோத காரியங் களில் ஈடுபட்டிருப்பான் என்று என்னால் நம்ப முடியவில்லை..
ஆனால் உண்மையை நீங்கள் ஏற்றுக் கொள்ளத் தான் வேண்டும் மேடம்!
கார்ஸன் அந்தப் பெண்மணிக்கு தேறுதல் சொல்லிக் கொண்டிருந்த வேளையில் டெக்ஸ் அவ்விடத்தை தீவிரமாக ஆராய்ந்தார்..
இந்தக் கடிதங் களில் உருப் படியான தகவல் ஏதேனும் கிடைக்கக் கூடும்.



மேஜையில் இருந்த கடிதங்களை ஒவ்வொன்றாக எடுத்து வேகமாக கண்ணோட்டம் விட்டார் டெக்ஸ்.. ஒரு கடிதத்தில் -
உடனடியாக புறப்பட்டு வந்து என்னோடு சேர்ந்து கொள்... கொலராடோ பகுதியில் கிரிப்பிள் க்ரீக்கில் உள்ள ஆண்ட்லர்ஸ் காஸினோவில் இருப்பேன். நீயும் வந்தாயானால் ஏப்ரல் முழுக்க நாட்களை உல்லாசமாக கழித்து விட்டு பின்னர் 'திருடர்களின் புகலிடம்' போய்ச் சேரலாம்.
மற்றவை நேரில்
- பாப் லீ.
எதுவும் சொல்லாமல் அந்தக் கடிதத்தை இருந்த இடத்திலேயே வைத்துவிட்டு, தன்னை பின் தொடர்ந்து வெளியே வருமாறு கார்ஸனுக்கு சைகை செய்தார்.
ஏதாவது அகப்பட்டதா?
ம்ம்...!
இந்த பெண்மணியின் மகன் பாப் லீ கிரிப்பிள் க்ரீக்கில் இருக்கிறான். அவனும் சமூக விரோத கும்பலில் ஒருவன் என்கிற உண்மை இவளுக்கு தெரியாது போலும்.
இன்னொரு இழவு விழப் போகிறதா?
இவள் தாங்கமாட்டாள்..! உயிரோடு பிடிக்க முயற்சிப்போம் வா.. புறப்படுவோம்!
எங்கே?
முதலில் டாட்ஸனுக்குச் சென்று லோகன் செத்துவிட்டதை ஷெரீப்பிடம் கூறி சவ அடக்கத்திற்கு ஏற்பாடு செய்யச் சொல்வோம். பின்னர் கொலராடோ நோக்கி பயணமாவோம்.
லீயை பிடிக்க இவ்வளவு அவசரம் காட்ட.. வேண்டுமா?
காரணம் இருக்கிறது! இன்றைய தேதியில் காஸிடியின் கூலிப்பட்டாளம் பல்வேறு இடங்களில் சிதறுண்டு கிடக்கிறது - அடுத்த கொள்ளைக்கு தலைவனிடமிருந்து அழைப்பை எதிர்பார்த்துக் கொண்டு! அங்கங்கே போய் ஒவ்வொருவனாக பிடித்துக் கொண்டு வரலாம் என்பது என் திட்டம்!



எனவேதான் சொல்கிறேன் நாம் உடனடியாக கிளம்ப வேண்டும் என்று. அவர்கள் மீண்டும் ஒன்று கூடுவதற்குள் நாம் அவர்களை குறிவைத்து வேட்டையாடி வருகிறோம் என்ற உண்மை அம்பலமாவதற்குள்.. - நாம் தாக்குதலை நடத்திவிட வேண்டும்!
அருமையான யோசனை!
எந்த அளவுக்கு பலிக்கும் என்று போகப் போகத்தான் தெரியும்..!
ஓடுடா.. ராஜா!
லோகனோடு நடந்த துப்பாக்கிச் சண்டை பற்றி ஷெரீப்புக்கு தெரிவித்துவிட்டு, பிங்கர்டன் ஏஜென்ஸியின் இன்ஸ்பெக்டர் ஸ்டீவன்ஸனுக்கு தங்கள் பயணம் பற்றி தகவல் கொடுத்துவிட்டு கொலராடோ நோக்கி இரயிலில் பயணம் மேற்கொண்டார்கள் டெக்ஸும், கார்ஸனும்.
சே.. உணவா இது - நாற்ற மடிக்கிறது!
விருந்துன்ன நாம் இந்த இரயிலில் வரவில்லை கார்ஸன். இந்த இரயில் பயணம் ஏகப்பட்ட நேரத்தை மிச்சப் படுத்தும் நமக்கு!
சில தினங்களுக்குப் பின் கொலராடோ பகுதியிலுள்ள கிரிப்பிள் கிரீக்கில்..
ANTLERS GAMBLING HOUSE
காஸினோ அதோ இருக் கிறது..! எப்போதும் நீ விழிப் போடிருக்க வேண்டும் - ஜாக்கிரதை!
ஓ.. ஷ்யூர்!



அமர்க்களமாக இருக்கிறது!
ஒரு மூலையில் போய் உட்காருவோம் - இங்கே நடப் பவை அனைத்தையும் கண்காணிக்க வசதியாக!
பில் அந்த இரு ஆசாமிகளை கவனி..! போலீஸ் மாதிரி தெரிகிறது..!
ஆமாம்.. சந்தேக மில்லாமல்!
வா.. போய் உரசிப் பார்ப்போம்!
விஸ்கியா?
ஆமாம்.. இரண்டு - டபிள்ஸ்!
ஏய்.. இது என்ன உங்க அப்பன் வீட்டு இடமா. அடுத்தவனுக்கு இடம் விடா மல் இப்படி . கையை காலை பரப்பிக் கொண்டு நிற்கிறாயே - விலகு அப்பால்!
?



இவ்வாறு சொல்லிக் கொண்டே டெக்ஸை இடித்துத் தள்ளி யவாறு முன்னேறினான் அந்த முரடன். திடீரென்று ஏதோ ஒன்று தன் விலாவில் உராய்வதை உணர்ந்து அப்படியே உறைந்து போய் நின்றுவிட்டான்.
என்ன?.. சும்மா வம்புக்கு இழுக் கிறாயா?
!
அல்லது - வாழ்க்கை அலுத்துவிட்டதா?
வ..வ.ந்து மிஸ்டர்.. நான்..
மூடு வாயை!
வம்பிழுக்கும் நோக்கத்தில் இங்கே வந்தாய்! நாற்றமடிக்கும் உன் வாயைத் திரும்பவும் திறந்தாயானால் குடலை உறுவி விடுவேன் ஜாக்கிரதை!
இன்றைக்கு கொஞ்சம் நல்ல மூடில் இருப்பதால் உன்னை இத்தோடு விட்டு விடுகிறேன்! திரும்பிப் பார்க்காமல் ஓடிவிடு!
உங்களை துன் புறுத்துவதல்ல என் நோக்கம்..
சும்மா.. தமாஷ் பண்ணிப் பார்க்கலாமே என்றுதான் -
சரி.. போய்த் தொலை!



அடேயப்பா! சுர்ரென்று என்னமாய் கோபம் வருகிறது!
துப்பாக்கியை அவன் உருவிய வேகம்..
மின்னல் தோற்றது போ- அது சரி.. அவன் யாராக இருக்கும்?
தெரியவிலலை! சின்னத்திரி, கொண்ட டைனமைட்டை விட ஆபத் தானவன் என்று மட்டும் புரிகிறது. வா.. போய்விடலாம் - இங்கிருந்து!
சாதாரண ரௌடிகள் - அப்படித் தானே?
அப்படித்தானிருக்கும்..! வேறு எவனுக்காகவோ பணியாற்றும் கைக்கூலிகளாகவும் இருக்கலாம்!
இரு புது முகங்களை கண்டதும் உரசிப் பார்க்கும் உறுத்தல் ஏற்பட்டிருக்கலாம்!
உதவிக்கு ஆட்களை திரட்டிக் கொண்டு திரும்பி வரு வார்களோ?
வரலாம்.. வராமலும் இருக்கலாம். எதற்கும் நாம் ஜாக்கிரதை யாக இருப்பது நல்லது.
நிம்மதியாக இருக்கவிட மாட்டான் களோ?
சில நிமிடங் களுக்குப் பின்-
டொக்! டொக்!
உள்ளே வரலாம்!


நீங்களா? என்ன வேண்டும்? ஏதாவது பிரச்னையா?
இரண்டு பேர் புதிதாக வந்திருக்கிறார்கள் பாஸ்.. வில்லங்கமான ஆசாமிகளாக தோன்றுகிறது!
வில்லங்கமா..? அப்படியென்றால்..? துரத்தியடிப்பதற்கென்ன?
..அதற்காகத்தானே உங்களுக்கு தண்டச் சம்பளம் அழுது கொண்டிருக்கிறேன்.
வாஸ்தவம் தான் பாஸ்.. ஆனால் -
அந்த இரண்டு பேரும்..
தொடை நடுங்கி பசங்களா - யார் அவர்கள்.. காட்டுங்கள் பார்க்கலாம்!
எதிர் சுவரருகே சென்று ஒரு படத்தை அவன் விலக்கிய தும் சிறு திறப்பின் வழியே காஸினோ தென்பட்டது.
மூலையில் உட்கார்ந்திருக்கிற நபர்கள்தான் பாஸ்!
அவன் குறிப்பிட்ட திசையில் பார்வையை நீளவிட்டான் காஸினோ பாஸ்.


கெட்டது போ.. அவர்கள் டெக்ஸும், கார்ஸனும் அல்லவா?
மோசமான பேர் வழிகளோ?
நச்சுப் பாம்புகள்!
நேரடி மோதல்!
கெடுபிடிக்கு பெயர் போன அட்டகாசமான ரேஞ்சர்கள் அவர்கள் இரு வரும்
ஐயோ.. அவர்களிடமா போய் நான் வாலை ஆட்டினேன்.
இன்னமும் நீ உயிரோடி இருப்பது உன் அதிர்ஷ்டம் தான்!
என்ன செய்யப் போகிறோம்.. பாஸ்..?
கண்டு கொள்ளாதமாதிரி ஒதுங்கியே இருந்து விடுவோம். அதுதான் நல்லது.



மற்றவர்களிடமும் சொல்லி வையுங்கள்.. அவர்கள் என்ன செய்தாலும் கண்டு கொள்ள வேண்டாம் என்று!
அவர்கள் இங்கே காரணமில்லாமல் வந்திருக்கமாட்டார்கள். இங்கே எதையோ, யாரையோ குறி வைத்துத்தான் வந்திருப்பார்கள்.
ஒருவேளை.. பாப் லீயை தேடி வந்திருப்பார் களோ?
'இரத்த வெறியர்கள்'கும்பலைச் சேர்ந்தவன் அவன். கடந்த சில வாரங்களாகவே இங்கே சுற்றியலைகிறான்.
இப்போதும் அவன் இங்கே தான் இருக் கிறானா?
ஆமாம்.. பாஸ்! சூதாட்ட மேஜையில் ஆடிக் கொண்டி ருக்கிறான்.
குட்!
அவனை உடனடியாக பிடித்துக் கொடுத்து விடுவதுதான். நமக்கு நல்லது. ஒரு சாதாரண இரயில் திருடனின் பொருட்டு என் காஸினோ தவிடு பொடியாவதை நான் விரும்பவில்லை.
சட்டென்று ஒரு காகிதத்தில் எதையோ கிறுக்கி தன் ஊழியனிடம் நீட்டினான் காஸினோ பாஸ்..
இந்தா!


இதைக் கொண்டு போய் யாருக்கும் தெரியாமல் அந்த ரேஞ்சர்களிடம் கொடு.. இந்த விஷயம் வெளியில் வரவே கூடாது - ஜாக்கிரதை!
பாப் லீயை பிடிக்க நாம்தான் ரேஞ்சர் களுக்கு துப்புக் கொடுத்தோம் என்று காஸிடிக்கு தெரிய வந்ததோ..
கவலை வேண்டாம் பாஸ்.. அந்த அளவுக்கு நாங்கள் மடையர்கள் அல்ல!
இதற்கிடையே
இங்கே அவன் தென்படக் கானோம்..! இத்தனை பெரிய கூட்டத்தில் யாரையுமே தேடிக் கண்டுபிடிப்பது சிரமமான காரியம்.
அவசரப்பட்டால் கூட்டத்தில் சொந்த தாத்தாவைக் கூடத்தான் கண்டுபிடிக்க முடியாது..! கொஞ்சம் நிதானமாகவே தேடுவோம்!
ஒருவேளை வெளியே எங்கேயாவது சுற்றித்திரிந்து கொண்டிருக்கிறானோ என்னவோ! காத்திருப்போம் - அவன் திரும்பி வரும்வரை!
நாம் துரத்தியடித்த இரண்டு போக்கிரி களும் அதோ திரும்ப வருகிறார்கள் பார்!
?


துப்பாக்கியை உருவ ஆயத்தமான நிலையில் டெக்ஸும், கார்ஸனும் தங்களை நோக்கி நிதானமாக நடந்து வந்த அந்த போக்கிரிகளின் மீதே பார்வையை லயிக்கவிட்ட வாறு காத்திருந்தார்கள். ஆனால் அவர்களோ இவர்களை முன்பின் அறியாதவர்கள் போல் இயல்பாக கடந்து சென்றனர். அப்போது ஒருவன் கிசுகிசு குரலில் கூறினான் -
நான் கீழே போடும் காகிதத்தை எடுத்துப் படியுங்கள்!
இதைச் சொல்லிவிட்டு திரும்பிக் கூட பாராமல் தொடர்ந்து நடந்து சென்று விட்டார்கள் அவ்விரு முரடர்களும். பிறர் சந்தேகிக்காத வண்ணம் குனிந்து, அவன் போட்டுச் சென்ற காகிதத்தை கையிலெடுத்தார் டெக்ஸ்.
சட்டென்று அதைப் பிரித்து பார்வையை ஓட்டினார்.
பாப் லீ வடக்கு மூலையி
இருக்கும் சூதாட்ட
மேஜையில் ஆடிக்கொண்
டிருக்கிறான். பிடித்துக் கொண்டு
போங்கள். இடையூறு ஏதும் வராது.
பிரதியுபகாரமாக என் காஸினோவுக்கு
சேதம் விளையாமல் பார்த்துக்
கொள்ளுங்கள்.
இதற்கிடையே, அவ்விரு முரடர்களும் ஒவ்வொரு மேஜைக்கும் சென்று அங்கிருந்த ஊழியர்களின் காதில்... டெக்ஸும், கார்ஸனும் நடவடிக்கையில் இறங்கும்போது வேடிக்கை பார்ப்பதை தவிர வேறொன்றும் செய்யக்கூடாது என்று எச்சரிதனர்
எனவே, டெக்ஸும், கார்ஸனும் பாப் லீயை நெருங்கிய போது அங்கே சட்டென்று நிசப்தம் குடி கொண்டது.
லீ.. எழுந்திரு!
கைகளை உயர்த்து!
?


பாஸின் உத்தரவுக்கிணங்க யாரும் சுட்டு விரலைக் கூட அசைக்கவில்லை..
தவறு செய் கிறீர்கள்..!
உன்னை கேட்டோமா? மூடு வாயை!
ஒரு வாரம் கழித்து 'திருடர்களின் புகலிடத்தில்' -
அந்த ரேஞ்சர்கள் நாசமாகப் போக.. இம்முறை பாப் வீயை பிடித்து விட்டார்கள்!
நான் பேப்பரை கையில் எடுக்கும் போதெல்லாம் நம் ஆட்களில் யாரையாவது அவர்கள் கொன்றதாக அல்லது பிடித்ததாக தப்பாமல் செய்தி இருக்கிறது.
அத்தனையும் வில்லரின் கைவரிசை!
அவனும் அந்த கிழக் கோட்டான் கார்ஸனும் தான்!
அவர்களை ஒழித்துக் கட்டப் போவதாக நீ சூளுரைத்ததாக ஞாபகம்.
என்னாலான முயற்சிகளை செய்து பார்த்துவிட்டேன் காஸிடி.. - பலிக்கவில்லை..! ஹீம்..!



அவர்கள் ஒன்றும் முயல்கள் அல்ல.. போனோம்.. வேட்டையாடினோம்.. வந்தோம் என்று நாம் வெற்றிக் களிப்போடு கொக்கரிக்க!
உடனடியாக நாம் ஏதாவது செய்தாக வேண்டுமே?
அவர்களைப் பற்றி நான் ஏன் அலட்டிக் கொள்ள வேண்டும்..
அலட்சியமாக இருந்தால் பாப் லீக்கும் மற்றவர்களுக்கும் நேர்ந்த கதிதான் நமக்கும்!
அவர்களை எண்ணி வீணாக கலவர மடைகிறாய் நீ என்பது என் அபிப்பிராயம்.
ஓ.கே. காஸிடி.. நீ வேண்டுமானால் இங்கே நிம்மதியாக உட்கார்ந்து கொண்டிரு.. என்னால் அப்படி இருக்க இயலாது.
எங்கே கிளம்பி விட்டாய்?
தாம்ஸன் ஸ்பிரிங்கில் ஹோண்டா ஜார்ஜ் பதுங்கிக் கிடக்கும் மறைவிடத்திற்கு..
சரி... உன்னிஷ்டம்!
ஆனால்.. ஏப்ரல் மாதக் கடைசியில் கட்டாயம் இங்கே வந்து சேர்.. பெரிதாக திட்டமிட்டிருக்கிறேன்.. உனக்கும் முக்கிய பங்குண்டு.
ம்ம்.. ம்ம்


ஆனால், மீண்டும் ஹோண்டா ஜார்ஜை சந்திக்கும் வாய்ப்பை கிட் கார்சுக்கு வழங்க விதிக்கு இஷ்டமில்லை போலும்.. சில வாரங்களுக்குப் பின் தாம்ஸன் ஸ்பிரிங்ஸை சேர்ந்த ஷெரீப் தன் பரிவாரங்களோடு சென்று ஹோண்டோ ஜார்ஜின் மறைவிடத்தை சூழ்ந்து கொண்டார்..
வெளியே வா.. ஹோண்டோ!.. நீ தப்பிக்கும் வாய்ப்பே கிடையாது!
இதுதான் என் பதில்!
டுமீல்!
ஆல் ரைட்..! சுடத் தொடங் குங்கள்!
டுமீல்! டுமீல்!
டுமீல்! டுமீல்!
டுமீல்! டுமீல்! டுமீல்!
வயதாகிவிட்டது எனக்கு.. அதிக நேரம் தாக்குப் பிடிக்க முடியாது! ஆனால் அவர் களில் நாலைந்து பேரையாது ஒழித்துக் கட்டாமல் நான் உயிரை விடமாட்டேன்!



தன் குதிரையை நோக்கி ஓடுகிறான்- மடக்குங்கள்!
தொடர்ந்து சுடுங்கள்!
டுமீல்!
டுமீல்
டுமீல்! டுமீல்!
ஆ.. செத்தேன்!
படுகாயமுற்று வீழ்ந்த நிலையிலும் போலீஸாரை நோக்கி சரமாரியாக சுட்டான் ஜார்ஜ்.. உயிரோடு பிடிபடக்கூடாது என்பதில் தீவிரமாக இருந்தான்.
துப்பாக்கியை போடு.. கீழே!
டுமீல்!
அதற்கு வேறு ஆளைப் பார்!
ஓ.கே.. நீயாக தேடிக் கொண்டது இது!
டுமீல்!
டுமீல்
அதே சமயம்... சற்றுத் தொலைவிலிருந்த பாறை முகட்டின் மேல் -
அங்கே ஏதோ கலாட்டா..


அங்கே விரைந்து சென்று உதவ வேண்டியது என் கடமை. ஆனால் நிலவரத்தை பார்த்தால் என் குறுக்கீடு அவனை காப்பாற்றாது என்று தோன்றுகிறது!
சில வினாடிகளுக்குப் பின் தோட்டாக்களால் துளைக்கப் பட்ட ஜார்ஜின் உடல் வெட்டுண்ட மரம் போல் சரிந்து விழுந்தது.
இனி சுட வேண்டாம்- தேவை யில்லை!
ஹீம்.. ஜார்ஜின் கதை இப்படியா முடிய வேண்டும்!
இனி எனக்கு இங்கே என்ன வேலை..! நடப்புகளை எல்லாம் கூட்டிப் பார்த்தால் ' 'இரத்தவெறியர்கள்' கும்பலுக்கு பிடித்தது சனி என்று நிச்சயமாக தெரிகிறது!
அடுத்து நடந்ததும் அதுதான்.. சில தினங்களுக்குப் பின் நியூ மெக்ஸிகோவில்
இரயிலை வழிமறித்து கொள்ளை யடிக்க கிட்கர்ரி முயன்றபோது மனவுறுதி படைத்த போலீஸ் கும்பலோடு நடந்த பயங்கர மோதலில் தோட்டாக்களுக்குப் பலியாகிப் போனான்..


இதன் பின்னர் புட்ச் காஸிடி, ஸண்டன்ஸ் கிட், ஹேரி ட்ரேஸி இன்னும் ஒரு சிலர் மட்டுமே எஞ்சியிருந்தனர்.. டெக்ஸும், கார்ஸனும் தொடர்ந்து மும்முரமாக வேட்டையாடி வந்தனர்..
க்ரெஸ்டனுக்கு இன்னமும் ஆறுமைல் தொலைவுதான்!
CRESTON 6 MILES
நமக்குக் கிடைத்த தகவல் மட்டும் சரியாக இருக்குமேயானால் ஹேரிட்ரேஸிக்கு இங்கேயேதான் சமாதி..
நம்மிட மிருந்து பலமுறை தப்பி நழுவிவிட்ட நச்சுப் பாம்பு அவன்..
இம்முறை அந்த அதிர்ஷ்டம் அவனுக்கு கிட்டப் போவதில்லை..
தொலைத்துக் கட்டி விடலாம்!
ஆனாலும் நழுவி ஓடுவதில் அவன் படு சமர்த்தன்!
காஸிடியும் ஸண்டன்ஸ் கிட்டும் நம் பட்டியலில் அடுத்து வருகிறார்கள்.
ட்ரேஸியை கணக்கு முடித்துவிட்டால் அவர்களை ஒழித்துக் கட்டுவது அந்த அளவுக்கு கஷ்டமான காரியமாக இராது.
பார்க்கலாம்!
சற்று நேரம் கழித்து - க்ரெஸ்டனில்..
உங்களுக்கு கிடைத்த தகவல் முற்றிலும் சரியானது வில்லர். இங்கிருந்து ஐந்தாவது மைலில் உள்ள ஒரு பண்ணையில் பதுங்கிக் கிடக்கிறான் ட்ரேஸி..



ஆனால் அவனை பிடிப்பதில் ஒரு கஷ்டம் இருக்கிறது வில்லர். அவன் ஈஸ்டன் குடும்பத்தினரை பிணையாளி களாக வைத்துக் கொண்டிருக்கிறான்
சமாளித்து விடலாம்!
நானும், கார்ஸனும் அவனை பிடிக்கப் போகிறோம் ஷெரீப். நாங்கள் வெற்றி பெறுவது நிச்சயம் என்பதோடு ஈஸ்டன் குடும்பத்தினருக்கு எவ்வித ஆபத்தும் வராது என்றும் உறுதியளிக்கிறேன்.
உங்களுடைய பரிவாரங்களை திரட்டிக் கொண்டு வழக்கமான பாதையில் அங்கே வாருங்கள்.
ஈஸ்டன் குடும் பத்தினருக்கு ஏதாவது தீங்கு நேரிட்டால் அதற்கு நீ பொறுப்பு ஏற்கத் தயாரா?
நான் தயார்! நான் சொல்கிறபடி நீங்கள் செய்தால் ட்ரேஸி யாருக்குமே எவ்வித தீங்கும் இழைக்க வாய்ப்பே இராது.
உன் கணிப்பு சரியாக இருக்கும் என்று நம்பு கிறேன்!
இரண்டு மணி நேரம் கழித்து..
அரைமணி நேர மாக இப்படியே படுத்து கிடக் கிறோம்.. ஆனால்-
உஷ்ஷ்..! பேசாதே..!- கொஞ்சமும் அசையாதே!

# இரத்த வெறியர்-களின் முடிவு!
















சே.. வெளியில் வைத்து என்னை மடக்கி விட்டார் களே!
குதிரையை விட்டு இறங்கி உங்களில் சிலர் லாயத்தின் பின்புறமாக வாருங்கள்.
த்ராக்!
பதிலடி கொடுக்க எனக்கு இப்போது வாய்ப்பு கிடைத்து விட்டது.
டுமீல்!
ஆஆ...
ஏய்.. கவனம்.. படுத்துப் பதுங்கு!
டுமீல்!
டுமீல்!



கழுகை குறி வைத்து சுட்டுக் கொண்டிரு கார்ஸன். நான் பண்ணை வீட்டை நோக்கி ஓடப் போகிறேன்.
பதுங்கியவாறு வேகமாக பாய்ந்து ஓடு அந்தப் பயல் ட்ரேஸிக்கு கழுகுக் கண்கள்...
டமீல்! டமீல்!
அம்மாடியோவ்.. நான் இனியும் இங்கிருந்தால் ஆபத்து
எப்படியாவது அங்கிருந்து தப்பியோடி விட வேண்டும் என்ற வெறியோடு லாயத்தின் பின் வாசல் வழியாக வெளியேறி ஓட்டம் பிடித்தான் ட்ரேஸி.
பள்ளத்தாக்கின் விளிம்பை நான் தொட்டு விட்டால் தப்பித்துக் கொண்டு விடுவேன்..
டமீல்! டமீல்! டமீல்!
தோட்டாவை இனி நீ வீணடிக்க வேண்டாம் கார்ஸன்.
வீழ்த்தி விட்டாயா.. என்ன?


வலியப் போய் இக்கட்டில் மாட்டிக் கொண்டு விட்டான். ஒன்று - அவன் கைகளை மேலே தூக்கியவாறு வெளியில் வர வேண்டும்.. அல்லது-
புரிகிறது! அவனை சுட தயக்கமாக இருக்கிற தாக்கும்?
ஆமாம்.. அவனை இந்த சந்தர்ப்பத்தில் சுட்டு வீழ்த்துவது ஏறத்தாழ கொலை செய்வது போலத்தான்.
ஆனால் ஷெரீப் அந்தக் கோணத்தில் சிந்திக்கவில்லை. ட்ரேஸி இசகு பிசகாக மாட்டிக் கொண்டு விட்டான் என்றதும் தன் ஆட்களை, இரு மருங்கிலும் நெருங்கிச் சென்று சுட்டுக் கொன்று விடுமாறு ஏவினார்.
டுமீல்! டுமீல்!
டுமீல்! டுமீல்!
இதைத் தொடர்ந்து இரு பக்கமும் தோட்டாக்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன. முடிவில் ஒரு தோட்டா அவனுடைய காலை பதம் பார்த்து விட்டது. தன் முடிவு காலம் நெருங்கி விட்டதை நொடியில் புரிந்து கொண்டு விட்டான் ட்ரேஸி.
அந்த பாவ காரியத்தை ஷெரீப்பே நிறை வேற்றட்டும்.
வெகுமதி தொகையை நம்மோடு பகிர்ந்து கொள்ள வேண்டியதில்லை என்று அறிந்தால் ஷெரீப்பின் சந்தோஷம் இரட்டிப்பாகக் கூடும்.
ஒரு வாரம் கழித்து - டயமண்ட் மலையில் தனித்து நின்ற ஒரு சிறிய வீட்டில் -
ஏதாவது செய்தி உண்டா?
வில்லரும், ஷெரீப்பும் பரிவாரங்களோடு போய் ட்ரேஸியை மடக்கி சுட்டுத் தள்ளிவிட்டார்கள்.


காஸிடி.. நரகத்தின் நுழைவாயில் தெரிய வில்லையா உன் மனக் கண்ணில்!
ம்ம்.. தெரியத்தான் செய்கிறது!
ட்ரேஸிக்கு ஏற்பட்ட கதி நமக்கும் வந்து விடக்கூடாது என்றநினைத்தால் நாம் உடனடியாக இடத்தை காலி செய்து விட்டு எங்கேயாவது கண்காணாத இடத்துக்கு ஓடிப்போய்விட வேண்டும்!
எங்கே போவது!
வேட்டை நாயையும் மிஞ்சிய மோப்ப சக்தி அந்த சண்டாளன் வில்லருக்கு உண்டு.
ஆனால் நான் நினைத்துக் கொண்டிருக்கிற இடம் அவனால் கூட கற்பனை செய்ய முடியாத இடமாக்கும்!
வைக்கோல் போரில் ஊசியை தேடி எடுத்துவிடுகிற திறமை வில்லருக்கும், கார்ஸனுக்கும் உண்டு.. ஆனால் அவர்கள் நம்மை பின் தொடர்ந்து அர்ஜெண்டைனாவரை வரும் சாத்தியமேயில்லை!
அர்ஜெண் டைனாவா?
ஆமாம்.. அங்கே போய் இரத்த வெறியர்கள் கும்பலுக்கு புத்துயிர் கொடுப்போம்!
ம்ம்.. நல்ல யோசனைதான்!
வில்லர் எப்போது வந்து கழுத்தில் கைவைப்பானோ என்று நடுநடுங்கிய வாறு தினசரி செத்துப் பிழைக்கும் அவலம் நமக்கு அங்கே இராது!



இது நம் அர்ஜெண்டைனு விஜயம் வெற்றி பெற.. அங்கே பாங்குகள், சுரங்கங்கள், இரயில் வண்டிகள் ஏராளம்- அதே சமயம் அங்கே டெக்ஸ் வில்லர்களும், ஷெரீப்புகளும் கிடையாது!
சொர்க்க பூமி தான் நமக்கு அது!
எனவே, எப்போதும் இணை பிரியா நண்பர்களான புட்ச் காஸிடியும், ஸன்டன்ஸ் கிட்டும் அமெரிக்காவுக்கு டாட்டா சொல்லிவிட்டு வெகுதொலைவிலிருந்த அர்ஜெண்டைனுவுக்கு பயணமாயினர்..
அங்கே போய் தங்களுக்கு என்று ஒரு கூட்டத்தை சேர்த்துக் கொண்டு நன்றாக வலுப்பெற்ற பின் தொடராக பல கொள்ளைகளை அடுத்தடுத்து நிகழ்த்தினார்கள். முதலில் - ஒரு பாங்க் கொள்ளை..
BANCO
ஒரு மாதம் கழித்து இன்னொரு பாங்க்கை கொள்ளையடித்து ஏகப்பட்ட பணத்தை வாரிச் சுருட்டிக் கொண்டு ஓடினார்கள்.
அதற்கு அடுத்த மாதம் யூகலிப்டஸ் நோக்கிச் சென்ற இரயில் அவர்களுடைய தாக்குதலுக்கு இலக்கானது. அவர்களுக்கு கிடைத்த தேட்டை 20,000 டாலர்கள். இவ்வாறாக ஏகப்பட்ட பணத்தை குவித்து வெற்றி நடைபோட்டுக் கொண்டிருந்தனர்..



தென்னமெரிக்க போலீஸார் அந்த விஷமிகளின் யுக்தியை புரிந்து, முறியடிக்க திராணியின்றி திணறினார்கள்.. நிலவரம் படு மோசமாகிப் போகவே அர்ஜெண்டைனா பிரஸிடெண்ட் உதவி கோரி வாஷிங்டனுக்கு தந்தி அனுப்பினார்.
..அவர்களுக்கு உதவிடுமாறு பிங்கர்டன் ஏஜென்ஸிக்கு கோரிக்கை வந்தது. அவர்களும் கால தாமதம் செய்யாமல் டெக்ஸ், கார்ஸன் ஜோடிக்கு அழைப்பு விடுத்தனர்..
?
இதைப் படி..
அர்ஜென்டைனா, பொலிவியா, பெரு, சிலி நாடுகளில் சமூக விரோத அட்டூழியங்கள் கைமிஞ்சிப் போய் நெருக்கடி நிலைமை உருவாகியிருப்பதாக தோன்றுகிறது.
அந்த விஷமிகள் கடைப்பிடிக்கும் வழிமுறையை பார்த்தால் அந்த அக்கிரமங்களின் பின்னணியில் நம் பழைய 'நண்பர்கள்' காஸிடியும், ஸண்டன்ஸ் கிட்டும் இருப்பார்களோ என்றொரு சந்தேகம்.
அப்படியும் இருக்குமா?
அந்த கும்பலை உடைத்தெறிந்து விட்டதான இறுமாப்பில் இருந்தோம்..
அவசரப்பட்டு அப்படி நினைத்து விட்டோம் போலும்.
காஸிடியையும், கிட்டையும் ஒழித்துக் கட்டாவிடில் மீண்டும் ' இரத்த வெறியர்கள் கும்பல் துளிர்த்து ஆலகால விருட்சமாக உருப்பெறும் அபாயம் உண்டு.
நானும் கார்ஸனும் உடனடியாக அங்கே செல்ல வேண்டும் - அப்படித்தானே?
வேறு வழி யில்லை, வில்லர்!
PINKERTON AGENCIES
DENVER OFFICE


உள்ளூர் அதிகாரிகளின் ஒத்துழைப்பு நமக்கு அங்கே பூரணமாக இருக்கும். உள்துறை மந்திரி உங்களுக்கு ஒரு அறிமுக கடிதம் கொடுத்தனுப்ப விருக்கிறார்.
கடிதம்..! எப்போதும் கடிதங்கள் தானு?


மூன்று மாதங்களுக்குப் பின் - ரியோ மார்க்விஸ் பொலிவியாவில்..
டெக்ஸ் வில்லரும், கிட் கார்ஸனும் மீண்டும் நம்மை வேட்டையாட கிளம்பியிருக் கிறார்களாம்!
நாசமாகப் போக... இங்கேயும் நம்மை நிம்மதியாக இருக்க விடமாட்டான்கள் போலிருக்கிறது - சண்டாளர்கள்!

# மரண வேளை!


நாம் உடனடியாக எங்கேயாவது தலைம றைவாக போய்விட வேண்டும். இல்லை யேல் அகப்பட்டுக் கொண்டு விடுவோம்.
கடைசியாக அவர்களை கன்கார்டியா சுரங்கப் பகுதியில் கண்டதாக தகவல்..


ஸைபெர் ஒரு வேளை அவர் களுக்கு தகவல் கொடுத்திருப் பானோ?
அப்படியிராது.. ஸைபெர் அம் மாதிரியான துரோகச் செயலை செய்யக் கூடிய வனில்லை!
சரியான வழித்தடத்தில் முன்னேற வில்லருக்கு ஒற்றர்களின் சகாயம் தேவைப்படுவதில்லை.. கழுகுக் கண்கள் அவனுக்கு.
இருக்கிற இடத் தில் வாலைச் சுருட்டிக் கொண்டு கிடக்காமல் நம் கழுத்தை அறுக்கிறானே!
பிங்கர்டனின் சம்பந்தம் இதில் இருப்பதை நீ மறந்துவிட்டுப் பேசுகிறாய்.. ஒரு வழக்கை எடுத்துக் கொண்டால் அதை சுலபத்தில் அவர்கள் கைவிடுவதில்லை.
சரி.. நாம் இப்போது என்ன செய்யப் போகிறோம்?
நீ ஒன்றும் செய்யத் தேவை யில்லை. நானும் கிட்டும், யோசித்து ஒரு முடிவுக்கு வரு கிறோம்.
நீ கல்லேகோஸ் சென்று அங்கி ருப்பவர்களை மறு உத்தரவு வரும்வரை வெளியே தலை காட்டக்கூடாது என்று எச்சரித்து வை.
ஓ.கே. காஸிடி!
மூன்றாமவன் புறப்பட்டுச் சென்றபின் நண்பர்கள் இருவரும் கலந்தாலோசிக் கலானார்கள்.
அந்த ரேஞ்சர் களை உண்டு இல்லை என்று ஒரு கை பார்த்து விட வேண்டியது தான்.
சரிதான்.. ஆனால் இங்கே வேண்டாம்!


அவர்களை நிரந்தமாக தூங்கப் பண்ண ஏற்ற இடம் எது என்று நான் ஓரிடத்தை தேர்ந்தெடுத்து வைத்திருக்கிறேன். ஆனால் நமக்கு அவசரமாக நிறையப் பணம் தேவைப்படும். அதைப் பெற வழி வகையையும் தீர்மானித்துவிட்டேன்.
லாபாஸ் இரயிலை கொள்ளையடிக் கிறோமா?
இல்லை..! அல்பாகா சுரங்கத்தில் பணி புரி பவர்களுக்கு வாடிக்கையாக சம்பளத் தொகையை ஏற்றிக் கொண்டு செல்லும் கழுதை மந்தையை வழிமறிக்கிறோம்!
ரொம்ப சுலப மாயிற்றே!
பின்னர் கானகத்தினூடே புகுந்து ஸான் விஸென்டா வழியாக கடலோர பிராந் தியத்தை நோக்கி பயணமாகிறோம்!
..அங்கே பரந்த சதுப்பு நிலப் பரப்பு இருக்கிறது. அந்த இடத்தில் வில்லருக்கும், கார்ஸனுக்கும் வலை வீசி வீழ்த்தப் போகிறோம்.
அருமையான யோசனை
இதற்கிடையே - லா பாஸில்..
இது - அவர்கள் தானா?
ஆமாம் ஸார்!
சுரங்கத்தில் வேலை கேட்டு அவர்கள் இங்கே வந்த
போது தங்கள் பெயர் மேக்ஸ்வெல், ப்ரவுன் என்று சொன்னார்கள்.
மேக்ஸ்வெல்.. புட்ச் காஸிடி! ப்ரவுன்.. ஸண்டன்ஸ் கிட்!


அவர்கள் எங்கே பயண மானார்கள் - தெரியுமா?
ஸாரி.. வில்லர்! அப்படியே எனக்கு தெரிந் தாலும் நான்..
புரிகிறது! உன் தங்கச் சுரங்கத்தில் உள்ள தங்கம் அந்த கயவர்களால் கொள்ளையடிக்கப் படமாட்டாது என்று நம்புவோமாக!
தொடை நடுங்கிப் பயல்கள்! அந்த பயல்களைப் பற்றி துப்புக் கொடுக்க எவனுக்கும் தைரியமில்லை!
தொலைகிறது- விடு!
விரைவிலேயே அந்த ஜோடி ஏதாவது ஒரு முட்டாள்தனமான நடவடிக்கையில் ஈடுபட்டு தங்களை தாங்களே வெளிப் படுத்தி விடுவார்கள் என்று நம்புகிறாய்- இல்லையா?
சரியாக யூகித்து விட்டாய்!
இரு வாரங்களுக்குப் பின் - டாபெஸா அருகே மலை மேட்டில் கழுதை மந்தை பயணமாகிக் கொண்டிருந்தபோது...
அதோ.. நான் சொன்னேனில்லையா! அவை சுமந்து செல்லும் மூட்டையில் இருப்பது கரன்ஸிகள்!
வா.. போய் ஒரு திருப்பத்தில் பதுங்கி இருந்து கபால் என்று மேலே பாய்வோம்!


அதைத் தொடர்ந்து-
நில்..! கைகள்ள அப்படியே மேலே உயர்த்து!
வழிப்பறி கொள்ளையர் கள்!
சுட்டு விடாதீர்கள்!
நாங்கள் சொல்கிறபடி செய்தீர்களே யானால் சிறு காயம் கூட ஏற்படாது உங்களுக்கு!
சொல்லுங்கள்!
கிட் - நீ அவர்களை கண்காணித்துக் கொண்டிரு! நான் பண மூட்டையை சேகரிக்கிறேன்!
யாரும் அசையக் கூடாது.. லேசாக அசைந்தாலும் தயங்காது சுட்டு விடுவேன். ஜாக்கிரதை!
கரன்ஸி இருக்கும் மூட்டையை தேடி அடையாளம் காண காஸிடி அதிக அவகாசம் எடுத்துக் கொள்ளவில்லை.
வாடா.. ராஜா! நீயும் எங்களோடு வந்தால் சௌகரியமாக இருக்கும்.. ம்.. கிளம்பு!



திரும்பி பார்க்காமல் ஓடிப் போங்கள்- இங்கிருந்து!
டுமீல்!
ம்ம் - பிடி ஓட்டம்!
போய் விடுகிறோம்..!
சுட்டு விடா தீர்கள்!
டுமீல்!
டாபாஸ் போய்ச் சேருகிறவரை ஓட்ட த்தை நிறுத்த மாட்டார்கள்!
வேலை படு சுலபமாக முடிந்து விட்டது.
நீண்ட பயணம் காத்திருக்கிறது நமக்கு!
சரி.. புறப்படு!
பண மூட்டையை சுமந்தவாறு கழுதையும் அவர்களோடு போனது...
பண மூட்டையை திருடியதைவிட அந்த கழுதையை கடத்திக் கொண்டு போனதுதான் அவர்கள் செய்த இமாலயத் தவறு என்றோ, பின்னர் அவர்களுடைய வீழ்ச்சிக்கு அதுவே காரணமாக அமையப் போகிறது என்றோ அந்த போக்கிரிகள் அப்போது அறியவில்லை.


அந்தக் கழுதை சுரங்கக் கம்பெனி சூப்பரின்டெண்டுக்கு சொந்தமானது.. தனக்குப் பிரியமான கழுதையை அவர் இழக்கத் தயாரில்லை. ஒரு நாலைந்து பேரை திரட்டிக் கொண்டு அந்த திருடர்களை தேடிச் சென்றதோடு போலீஸிலும் புகார் செய்து வைத்தார்.
மேலிடத்து உத்தரவு..! படைப்பிரிவு மொத்தமும் உடனே புறப்படவேண்டும்.. அமெரிக்க கொள்ளையர்கள் அல்பாகா சுரங்க கம்பெனியின் சம்பள பணத்தை வழிப்பறி செய்துவிட்டார்களாம்.
இம்முறை அவர்கள் தப்பவே முடியாது!
டெக்ஸ் விஷயத்தை கேள்விப் பட்டார்..
சத்தியமாக சொல்கிறேன்.. ஸார்! சூப்பரின்டெண்டின் கழுதையையும் தள்ளிச் சென்று விட்டார்களாம்!
நிச்சயமாக?
வா.. நாமும் போகலாம்! நமக்கு கிடைத்திருக்கும் பொன்னான வாய்ப்பு இது!
நழுவவிடக் கூடாது!
கழுதையையும் ஏன் கொண்டு போனார்கள் - மடையன்கள்
தெரியவில்லை! ஏதாவது தகுந்த காரணம் இல்லாமல் அந்த
அற்பத் தனத்தை செய்திருக்க மாட்டார்கள்!
மூன்று தினங்களுக்குப் பின் - ஸான் விஸெண்டாவில்..


முழு அளவிலான கிராமமாக இது இருக்கும் என்றல்லவா நினைத்து வந்தேன்..! சின்னதொரு குடியிருப்பு- ஹீம்..
உண்ண, உறங்க இடம் கிடைத் தால் போதாதா நமக்கு?
அங்கே கவனி.. - அது சூப்ப ரிண்டெண்டின் கழுதை தானே?
சந்தேக மில்லாமல்!
அப்படியானால் சுற்று வட்டாரத்தில் பேசப்பட்டு வரும் அமெரிக்க திருடர்கள் இவர்களாகத்தான் இருக்கும்.
என் கழுதையில் ஏறி ஆற்றின் வளைவுப் பகுதிக்கு போ.. அங்கே படைப்பிரிவு இருக்கிறது. நாம் கண்டதை அவர்களிடம் சொல்.
இதோ.. போகிறேன்!
அதே சமயம்..
ஆமாம் மிஸ்டர் வில்லர்..! உங்களுடைய யூகம் சரியாகத் தான் இருக்கும். கானகத்தின் வழியாக தப்பியோட அவ்விரு திருடர்களும் திட்டமிட்டிருந்தால் இவ்வழி யாகத்தான் அவர்கள் வரவேண்டும்.



அருகில் ஏதாவது கிராமம் உள்ளதா?
கிராமம் என்று அதை சொல்ல முடியாது. சிறியதொரு குடியிருப்பு அது - ஒரு மைல் தொலைவில் இருக்கிறது.
அங்கே போய் நோட்டம் விட்டால் என்ன?
கட்டாயம் போவோம்!
நீங்கள் விரும்புவது போல் நான் என் ஆட்களோடு இங்கேயே இருக்கிறேன்.
எங்களுக்கு இடப்பட்டுள்ள உத்தரவின் படி..
உதவி.. உதவி.. அமெரிக்க போக்கிரிகள்..
நாம் எதிர் பார்த்த தருணம் வந்துவிட்டது டெக்ஸ்.
ஏறு.. குதிரை மீது!
அடுத்த கால் மணி நேரத்தில் டெக்ஸும், கார்ஸனும் படைப் பிரிவினரோடு அந்த குடியிருப்பை சென்றடைந்தனர்..
சரணடையுங்கள்..!
இவர்கள் எப்படி இங்கே..?
பின் வாங்கு.. கிட்!
டுமீல்!
டுமீல்!


அவர்களை உயிரோடு பிடிக்க முயற்சிப்போம் கார்ஸன்..!
ஊய்ய்..!
எனக்கு காலில் தோட்டா பாய்ந்து விட்டது. புட்ச் நீயாவது தப்பி ஓடு..!
சொன்னால் கேள்..!
ஊஹீம்..!
டுமீல்!
டுமீல்! டுமீல்! டுமீல்!
காஸிடி! கிட்..! இருவரும் கைகளை உயர்த்தியவாறு வெளியே வாருங்கள். இம்முறை நீங்கள் தப்பிக்கவே முடியாது!
டுமீல்!
என்னை உயிரோடு பிடிக்கலாம் என்று நீ கனவு கூட காணாதே!
டுமீல்! டுமீல்!


டுமீல்!
டுமீல்!
டுமீல்!
டுமீல்!
டுமீல்!
உயிரோடு பிடிபடக் கூடாது என்ற உறுதியோடு, முடிந்த வரை எதிர்த்துப் போராடினார்கள் அவ்விரு அக்கிரமக் காரர்களும்.. இருள் நன்றாக கவிழும் வரை தோட்டாக்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன. பின்னர் திடீரென்று தோட்டாக்கள் வருவது ஓய்ந்து போய்விட்டது. கிழக்கு வெளுக்க காத்திருந்தார்கள் டெக்ஸ் வில்லரின் குழுவினர். விடிந்ததும் அந்த கல்லாலான சிறு கட்டிடத்தை மெல்ல நெருங்கினர்.
மீண்டும் சரணடையுமாறு டெக்ஸ் உரத்த குரலில் உத்தர விட்டார். பதில் ஏதும் வரவில்லை. மிகுந்த எச்சரிக்கை யோடு உள்ளே நுழைந்து அவர்கள் பார்த்தபோது -
இருவரும் மாண்டு விட்டனர்.
உயிரோடு பிடிக்கவே முடியாது என்று சூளுரைத்தார்கள். அதை நிஜமாக்கி விட்டுப் போய்விட்டார்கள்.
நம் பணி இத்தோடு முற்றுப் பெறுகிறது கார்ஸன். வா... கிளம்புவோம்!
திறமைசாலிகள்..! ஆனால் தங்கள் திறமையை தவறான வழியில் பிரயோகித்ததனல் இப்படியொரு கோர சாவு இவர்களுக்கு வாய்த்துள்ளது.. - ம்ம்.. புறப்படுவோமா!
முற்றும்.




(மாத இதழ்)

வித்தியாசமானதொரு முழு நாவல்!
திகைக்க வைக்கும் சிறுகதைகள்!
துடிதுடிப்பான படக்கதைகள்!
ப்ளஸ்
திகிலூட்டும் நிஜ சம்பவங்களின் தொகுப்பு!




ஏஜெண்டுகள் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

**தி விஜய் புக்ஸ்**

8/D-5, சேர்மன் P. K. S. A. A. ரோடு, சிவகாசி - 626 123

போன்: 21159, 20649

# கோடை மலர்!

